# ஜீவ மன்னா

அனுதினமும்

2018 நவம்பர்

86 வது வெளியீடு

## கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்....

சங்கீதம் 138:8

அட்டைப் படத்தின் கதை உட்புறத்தில்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அட்டைப்பட விளக்கம்

# ஜீவ மன்னாவைக் குறித்து சில வார்த்தைகள்!

## கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே!



ஜீவ மன்னா தினமஞ்சரியின் 86 ஆவது வெளியீட்டையும், தயாரித்து, தொகுத்து இடைவிடாது உங்கள் கரங்களில் கிடைக்க தேவன் எமக்களித்த அநுக்கிரகத்திற்காக நன்றி கூறுகின்றேன். எமது இத்தினமஞ்சரிக்கூடாக ஆசீர்வாதங்களையும் தேவ வசனத்தின் மெய்யான சத்தியத்தையும் அறிந்து ஆவிக்குரிய வாழ்வில் செழிப்புற்று காணப்படுகின்றீர்கள் என்று விசுவாசிக்கின்றேன். தேவபிள்ளைகளே! இதில் எந்தவொரு நன்மையும் நீங்கள் பெறாவிட்டால் 86 வெளியீடுவரை இடைவிடாது முன்னோக்கி கொண்டு வருவதற்கு தேவனின் அநுக்கிரகத்தைப் பெற்றிருக்க முடியாது என எண்ணுகின்றேன்.

தேவபிள்ளைகளே! இவ்வெளியீடானது தேவனின் ஆலோசனைகளுக்கமைய அரம்பிக்கப்பட்டது. இவ்வாறாக அனைத்துச் செய்திகளும் ஆவிக்குரிய ஊட்டச்சத்துக்களோடு நிறைந்த போஷாக்குக்கு இணையாக இருக்கின்றப்படியால் எமது தினமஞ்சரியை தேவன் கிருபையோடு முன்னோக்கி கொண்டு வருகின்றார். எமது ஜீவ மன்னா வாசகர்கள், விசுவாசிகள் அனைவரும் சந்தோஷ காணிக்கைகள், கொடுப்பனவுகள், வாசகர்களின் கட்டணங்கள் என்பவைகளை ஏற்ற நேரத்தில் கிடைக்கச் செய்யவில்லையெனினும் இடைவிடாது தொடர்ந்து எம்மோடிருந்து அற்புதக்கிரியைகளை உன்னத தேவன் நடத்தி வருகிறார். நீங்கள் எமக்காக தேவனுடைய சமூகத்தில் ஏறெடுக்கும் ஜெப விண்ணப்பங்களுக்கு தேவன் தருகின்ற மகத்துவப் பதிலே இதுவென்று கூறினாலும் மிகையாகாது. ஆகையால் எதிர்க்காலத்தில் எமது வெளியீட்டை ஆவியோடும், கருத்தோடும், அருமையாக தொகுத்து வடிவமைத்துக்கொள்ள உங்கள் வல்லமை நிறைந்த உற்சாகமான ஜெபங்களினால் தாங்கி எமக்கு ஒத்தாசை செய்யுமாறு மிக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.




தேவனுடையவர்களே! நீங்கள் எமது ஜீவ மன்னா தினமஞ்சரிக்கூடாக பெறுகின்ற ஒவ்வொரு ஆசீர்வாதங்களின் போதும் எமக்கு இரண்டு மூன்று வார்த்தைகளால் அறிவிக்க மறந்துவிடாதீர்கள். இப்பொழுது ஒரு வெளியீட்டை குறிப்பிட்டத் தினத்தில் சம்பூரணப்படுத்தி உங்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு 30 பேருக்கு மேலாக செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றோம் என்பதை அறியத் தருகின்றேன். உரிய நேரத்தில் காணிக்கைகள், கொடுப்பனவுகள், கட்டணங்கள் போன்றவற்றை அனுப்பி எமக்கு ஒத்தாசையளிப்போருக்கு முழு உள்ளத்தோடு நன்றி கூறுகின்றேன். அவ்வண்ணமாக செயல்படுவோருக்கு ஏற்ற நேரத்தில் தேவன் அபரிமிதமான ஆசீர்வாதங்களை பொழிந்தருளுவார். அருமையானவர்களே! ஏழு வருடங்களும் இரண்டு மாதங்களுமாக என்னை



☞ அட்டைப்படத்தின் உட்புறம் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிசுத்த ஆவியான தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

# ஆசிரியர் உரை

## தனது ஜனங்களை தினமும் சந்திக்க தேவன் திறந்த வாசலே ஜீவ மன்னா தின மஞ்சரி!

### கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே!

இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். **86வது வெளியீட்டிலும்** ஆசிரியரான நான் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். **விசுவாசப் பயணத்தை மேற்கொண்டு 50ரூபா கூட இல்லாது ஆரம்பித்த இந்த தேவ ஊழியத்தை தொடர்ந்திட என்னை தேவன் ஆசீர்வதித்துள்ளார். ஆயிரக்கணக்கான மனிதர்களின் வாழ்வு முற்றுமாக மாறுதலடைந்து மறுமலர்ச்சியடைந்துள்ளது.**

ஜீவ மன்னா வாசகர்களே! எட்டு வருடங்களுக்கு முன்னதாக தனது ஜனங்களோடு தேவன் தினந்தோறும் பேச வேண்டுமென்று **ஜீவ மன்னா தினமஞ்சரியை** எழுதுவதற்காக **பரலோக ஆலோசனைகளை** எனக்களித்தார். இது போன்ற வெளியீட்டை தயாரித்து, தொகுத்து **புத்தக வடிவில்** அமைத்து விநியோகிப்பதென்பது **மிகக் கடினமானதும், பொறுப்பான ஊழியப்பங்கும்** என்பதை விளங்கிக் கொண்டேன். ஆனாலும் தேவனது வசனத்தின்படி **எவ்வித யுத்த பயிற்சியும் பெறாத கிதியோன்** எனும் மனிதன் மீதியானியரின் யுத்த சேனையை முற்றிலுமாக தோல்வியடையச் செய்தது போன்று **(நியாயாதிபதிகள் 6:11-7:1-25)** நானும் தேவனது வசனத்தின்படி பணம் கையில் இல்லாத நிலையிலும் **துணிகரமாக** இத்தயாரிப்புக்களை ஆரம்பித்தேன்.

பிரியமானவர்களே! இக்காரியத்தை ஆரம்பிக்க எனக்கு ஒத்தாசை புரிந்த தேவன் **எங்களை இறுதிவரை நடத்திச் செல்ல வல்லமையானவராகவிருக்கிறார். (வெளிப்படுத்தல் 22:13)** ஆகையால் **புதிய வாசகர்களுக்கு** இந்த ஜீவ மன்னா வெளியீடுகளை அறிமுகப்படுத்தி **நரகாக்கினியிலிருந்து** ஆத்துமாக்களை மீட்டுக் கொள்ள மனமுவந்து செயற்படுமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| **பார்வோன் சேனைகள் பின்தொடர்ந்த** | **போது!** | இப்படிக்கு |
| **பாரினில் கர்த்தர் திறந்தார் செங்கடலில் புதிய** | **பாதை!** | **இயேசு கிறிஸ்துவுக்குள்** |
| **பாவ வழிகளில் மீட்க ஆத்மீக இஸ்ரவேலருக்காக** | **இப்போது!** | போதகர் ஏ.ஜே.ஜோசப் |
| **பரம கானானாம் ஜீவமன்னா தினமும் பேசுகின்றது** | **ஜீவவார்த்தை!** | **இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்** |

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் திருமுழுக்கு ஞானஸ்நானம் பெற்றவரா?

ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் அன்பு பிள்ளைகளே!

ஆத்மீகர்கள் என்னும் ரீதியில் முழுக்க ஞாஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா? முழுக்க ஞானஸ்நானத்தை தவிர வேறு எதுவும் மாற்று வழி இருக்கின்றதா? எனும் காரணத்தைக் குறித்து இவ் விஷேசித்த பக்கத்தில் சுருக்கமாக எழுத விரும்புகின்றேன். அன்பார்ந்தவர்களே! தெய்வீகத்தன்மையோடு எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ள ஒவ்வொரு வசனமும் (**2 தீமோத்தேயு 3:16**) நூற்றுக்கு நூறு வீதம் வல்லமையும் மிகுந்த பலனும் மிக்கது. அத்தோடு ஒரு போதும் மாறாது. தேவ வசனத்தை மாற்றுவதற்கு யாருக்கும் எந்த அனுமதியும் கிடையாது. (**வெளிப்படுத்தல் 22:19**)



ஆனாலும் எனது சகோதரன் "**ஒருவர் யுகத்தின் தேவைகளின் படி இத்திருமுழுக்கு ஞானஸ்நானம் மாற்று வழியில் செய்திட்டால் பிழையொன்றுமில்லையா?**" என என்னிடம் வினவினார். எவ்வித மாற்றமும் செய்ய முடியாதென்று உறுதியாகக் கூறி தேவ வசனங்களளோடு தெளிவாக விளக்கப்படுத்தினேன்.

பிரியமானவர்களே! **பரி.யோவான் 3:5** தேவ வசனத்தின் படி "**ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என மெய்யாகவே மெய்யாகவே என வலியுருத்தி கூறுகின்றார்.**"



ஆகையால் முழுக்க ஞானஸ்நானம் பெறாத யாருமே நித்திய ஜீவ மோட்ச ராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியாது. இன்னுமாக **பரி.மாற்கு 16:16**ல் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்றெழுதப்பட்டுள்ளது. "**...நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். அதன் பின்னர்... அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்**" என **ரோமர் 6:4,5** வசனம் கூறுகிறது.

அருமையானவர்களே! இப் பூலோகத்திலே எம் இரட்சிப்பைக் குறித்து சாட்சி கூறுபவைகள் மூன்று ஆகும். ஆவி, ஜலம், இரத்தம் என **1 யோவான் 5:8** கூறுகிறது. இதன்படி நீரின் சாட்சியான ஞானஸ்நானம் பிழையற்றது. இன்னுமாக இயேசு கிறிஸ்து யோவான் மூலமாக திருமுழுக்கு ஞானஸ்நானம் பெற்று முழு உலகத்திற்கும் முன்னோடியாக இருந்தார். (**பரி.மத்தேயு 3:13,17**) அது போலவே தேவ ஆவியானவரும் தேவ பிதாவும், இயேசுக்கிறிஸ்து தேவகுமாரனே என்று சாட்சி பகர்ந்தார்கள். நாமும் இயேசு கிறிஸ்துவை முன்னோடியாய் கொண்டு முழுக்கு ஞானஸ்நானம் பெற்று தேவ இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்போம்.



**"உங்களுக்கு இயேசுதுணை!"**

**ஆவிக்குரிய செய்தி : தலைமைப் போதகர் ஏ.ஜே. ஜோசப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 01
வியாழன்

# மகிழ்ச்சியின் நிறைவை பெற்றுத்தரும் பரிசுத்த கர்த்தர்!

வேதவாசிப்பு
எஸ்தர்
அதி: 09-10

**"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும்,... உண்டு."** (சங்கீதம் 16:11)

அருமையானவர்களே! கண்ணின் மணியைப் போன்று கருத்தாய் காக்கின்ற கர்த்தர் சென்ற மாதத்தில் உங்களை மிகச் சிறப்பாக வழிநடத்தியமைக்காக ஸ்தோத்தரிக்கின்றேன். இப்புதிய மாத ஆரம்பத்திற்காக இன்றைய நாளிலும் அதிகாலையில் தேவனை நமஸ்கரித்து, உங்களுக்குக் கிடைத்த விலைமதிக்கமுடியாத ஜீவனுக்காக நன்றி செலுத்தியிருப்பீர்களென எண்ணுகின்றேன். தேவ அன்பில் நிலைத்திருக்கும் தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தின்படி **"ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர் உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும்... உண்டு"** என தாவீது இராஜா பாடியிருப்பது போல் நீங்களும் முழு ஆவியோடு வெளிப்படுத்துங்கள். இவ்வண்ணமாக, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உபத்திரவங்களால் நிறைந்த உங்கள் வாழ்க்கை **மகிழ்ச்சியின் முழு நிறைவில் பூரிப்பதாக** எனவும் மாதம் முழுவதும் இந்நிலை தொடர்ந்திருப்பதாக என வாழ்த்துகின்றேன்.

**நிறைவானதைத் தேடும் பிரியமான தேவ பிள்ளைகளே**! இன்று உலக மனிதர்கள் லௌகீகமான பலவற்றில் மகிழ்வைத் தேடுகின்றார்கள். **மது, போதை வஸ்துக்களைப் பாவித்தல், இரவு விடுதிகளில் நடனமாடுதல், சூதாட்டங்களில் பெருந்தொகையான பணத்தை செலவழித்தல், காம இச்சை சம்பந்தமான அசுத்த காரியங்களில்** ஈடுபடுதல் போன்ற தேவனுக்குப் பிரியமற்ற பெரும்பாலானவைகள் உண்டு. ஆனாலும் அவைகள் அனைத்தும் அழிந்துபோய்விடும். அவர்களின் சந்தோஷமானது மிகச் சொற்பகாலத்திலேயே அகன்றுபோக **துக்கம், வேதனை, குழப்பங்கள்** போன்றவைகளால் கதிகலங்கி போய்விடுவார்கள். அதற்குக் காரணமாவது அவர்கள் தேவனை நேசிக்காது **தேவ சமுகத்தில் மகிழ்ச்சியின் முழுநிறைவுண்டு என்பதை அறிந்துக்கொள்ளாமையே ஆகும்.**

தேவனுக்குரியவர்களே! ஆவிக்குரிய **பூரண மகிழ்ச்சியில்** நிலைத்திருக்கும் நீங்களோ எனில் தேவனின் ஜீவவழியைப் பெற்று, அவ்வழியில் நுழைந்துவிட்டதால் **ஒருபோதும் முடிவில்லாத நித்திய மகிழ்ச்சிக்கான பூரண நிலையை அடைந்து**விட்டீர்கள். இப்படியான மகிழ்வின் நிறைவைப் பெற ஆயத்தமற்றிருக்கும் பிள்ளைகளே! நீங்கள் **பரிசுத்த உள்ளத்தோடு** தேவனை நமஸ்கரித்து தேவனின் சந்தோஷத்தின் நிறைவினை உங்கள் வாழ்விலும் பெற்று அனுபவியுங்கள். அப்பொழுது **பரிசுத்த ஆவியானவர்** மூலம் உங்கள் உள்ளத்தில் அனைத்து குழப்ப நிலைகளிலிருந்தும் விடுதலையைப் பெற்றுக்கொள்வதோடு **தேவ ஆசீர்வாதங்களையும்** பெற்றுக்கொள்வீர்கள். **பூரண சமாதானம்** உங்களை ஆளக்கடவது. **மகிழ்ச்சிகரமான நாள்!**

ஜெபம்

அன்பின் இயேசுவே! லௌகீகமாக வாழ்ந்து பலவிதங்களில் மகிழ்ச்சியைத் தேடினேன். ஆனாலும் பூரண மகிழ்ச்சியை நான் பெறவில்லை. உங்கள் மகிழ்ச்சியின் நிறைவை அநுபவிக்க ஜீவவழியைக் காட்டுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்." (சங்கீதம் 21:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 02
வெள்ளி

வாழ்க்கை பயணத்தில்
வெற்றியோடு கடந்து செல்ல
துணை புரியும் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 01-02

**"என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவுசெய்தருளும்."** (ஆதியாகமம் 24:12)

நேற்றும், இன்றும், என்றும் மாறா அளவற்ற அன்பு கொண்ட இயேசுகிறிஸ்துவின் அன்பு தேவபிள்ளைகளே! இன்றும் நீங்கள் **விசுவாசத்தோடு** எதிர்பார்க்கும் காரியங்கள் அனைத்தும் அவ்வண்ணமாகவே வெற்றிபெறச் செய்யும் தேவன் நமது பிதாவானவர் மாத்திரமே. ஆகையால் இன்றைய நாளிலும் உங்கள் தனிப்பட்ட தேவைகள் தின காரியங்கள் நிறைவேற வேண்டுமென்பதால் தேவ சமுகத்திலிருந்து **ஜெபம் பண்ணி** ஜீவ மன்னா தின மஞ்சரியை கரத்திலேந்தி வாசிக்கிறவராகவும் இருக்கலாம். ஆகையால் உங்கள் சிந்தனை எதிர்பார்ப்புக்களை காண்கின்ற தேவன் **இயேசு** எனும் நிகரற்ற நாமத்தில் அவை அனைத்தையும் நிறைவேற்றித் தருவாராக! என வாழ்த்துகின்றேன்.

விசுவாச ஓட்டத்தை ஓடும் தேவபிள்ளைகளே! ஈசாக்கிற்கு **ஒரு துணையைத்** தேடும்போது அவர் குடியிருக்கின்ற தேசத்திலல்லாமல் ஆபிரகாமின் இனத்தாரைச் சேர்ந்த பெண்ணைத் தேடிக் கொண்டு வரும்படி ஆபிரகாம் அவரது ஊழியக்காரனிடம் பொருத்தனையை பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் அவ்வூழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டு போனான். இன்னுமாக பிரதான தேவ வசனத்தின் பிரகாரம் **"என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப் பண்ணி என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவுசெய்தருளும்"** என ஊழியக்காரன் ஜெபித்தான். தன் எஜமானுடைய காரியங்களை வெற்றிகரமாக நடாத்தி முடிக்க விசுவாசத்தோடு ஒரு அடையாளத்தைக் கேட்டான். அவ்வடையாளத்தின்படியே ஈசாக்கின் வருங்கால மனைவியென்பதை அறிந்துக்கொண்டான். **(ஆதியாகமம் 24வது அதிகாரத்தினை வாசியுங்கள்).**

விசுவாசத்தோடு பயணிக்கிற அன்புப் பிள்ளைகளே! நீங்கள் சந்தேகமின்றி ஒரு காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள உங்களுக்குள் ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கிருந்த உறுதியான விசுவாசமும் அது நிலையான விசுவாசமாகவும் இருக்க வேண்டும். அதுவென்றால் கர்த்தர் எனது காரியத்தை நிச்சயம் நிறைவேற்றித் தருவாரென்பதே, உங்களுக்கும் அவ்வூழியக்காரனைப் போன்று அடையாளமொன்றைக் கேட்கலாம். உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் வெற்றியானது காரியங்களை நிறைவேறும் படியாக நிலையற்ற சிறிய விசுவாசம், அல்லது அரைகுறைவான **விசுவாசம்** போதுமானதல்ல. **விசுவாசத்தோடு** பயணித்து வாழ்வில் ஜெயங்கொள்ளுங்கள் **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேற்றரவாளரே! ஈசாக்கிற்கு வாழ்க்கைத் துணைவி தேடும்படியாக ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கு தயவுசந்தளித்து பயணத்தை வெற்றியோடு நடத்துனீரே. என் வாழ்விலும் நேர்த்தியான காரியங்களை விசுவாசத்தோடும், வெற்றியோடும் முடிக்க ஆசீர்வதிக்குமாறு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்துபோனார்கள்;..."
(எபிரேயர் 11:29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 03
சனி

## பொருத்தனைகளை நிறைவேற்றும் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 03-04

**"தாம் சொன்ன இந்த வார்த்தையின்படி கர்த்தர் செய்வார் என்பதற்கு இது கர்த்தரால் உனக்கு அடையாளமாயிருக்கும் என்று சொல் என்றார்;..."** (ஏசாயா 38:8)

தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனை **உள்ளத்தில் முழுமையாக ஏற்று** தேவ ஆவியானவரோடு முன்னோக்கி பயணிக்கும் அன்பு தேவ பிள்ளைகளே! இன்னுமொரு **அருமையான செய்தியோடு,** மலர்ந்த இக்காலைப்பொழுதில், உங்களைப் பெலப்படுத்த தேவன் ஈந்தளித்த **உன்னத கிருபைக்காக** ஸ்தோத்தரிக்கின்றேன். இவ்வண்ணமாக இன்றைய நாளில் உங்களின் அனைத்து தின காரியங்களும் இயேசு கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் வெற்றியடைவதாக! என்றும் தேவன் உங்களுக்களித்த பொருத்தனைகள் நிறைவேறுவதாக, என்றும் முழு உள்ளத்தோடு பிரார்த்திக்கின்றேன். ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

பிரியமானவர்களே! தேவன் பரிசுத்த வேதாகமத்தின் தேவ வசனங்களுக்கூடாக, ஆத்மீகரீதியிலும், லௌகீக காரியங்களிலும் பெலப்படும்படியாக அருளியிருக்கும் தேவ பொருத்தனைகளில் எத்தனை உங்கள் வாழ்வில் நிறைவேறி வெற்றி பெற்றுள்ளீர்கள்? அப்படியில்லாவிட்டால் உங்கள் சுயஅறிவில் செயல்பட்டு வாழ்வில் ஏறெடுத்த ஜெபங்களுக்கு பிரதிபலன் கிடைக்காது, உங்கள் பிரச்சினைகளில் தோல்வியுற்று வேதனைப்படுகின்றீர்களா? ஆனாலும் பிரதான தேவவசனத்தில் **"நாம் சொன்ன இந்த வார்த்தையின்படி கர்த்தர் செய்வார் என்பதற்கு இது கர்த்தரால் உனக்கு அடையாளமிருக்கும்"** என வியாதியுற்றிருந்த எசெக்கியா இராஜாவிடம் கூறியதைப் போன்று தேவன் உங்களுக்கும் அடையாளம் காட்டி வாழ்வில் ஜெயம் கொடுக்கவும், உங்களைப் பெலப்படுத்தவும் ஆயத்தமாயிருக்கிறார்.

தேவனுடையவர்களே! சத்தியத்தை கௌரவப்படுத்துகின்றவராகிய நீங்கள் மிக அன்போடு கனம் பண்ணியவர்கள் உங்களுக்கு வாக்குக் கொடுத்த காரியங்களை நிறைவேற்றாது உங்களைப் பொருட்படுத்தாது போகின்றார்களா? உங்களின் சொந்தப்பிள்ளைகள் வயோதிபரான உங்களை சுமையாக நினைத்து பாராமுகமாயிருக்கின்றார்களா? ஆனாலும் **உங்கள் அன்பு தேவன்** உங்களுக்களித்திருக்கும் பொருத்தனைகளையும், கூறியவைகளையும் அடையாளத்தோடு நிறைவேற்றுவாரென்பதை உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளுங்கள். அன்பு நிறைந்த தேவன் உங்கள் நினைவுகளை அறிந்திருப்பதனால், **நன்மையானமுடிவுகளையும், நல்லபிரதிபலன்களையும்,** பெற்றுத்தருவார். உங்கள் உணர்வுபூர்வமான தேவனது அன்பில் முழு ஆவியோடும் கிட்டிச் சேர்ந்து **ஆசீர்வாதம்** பெறுங்கள். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! மனிதர்கள் எனக்குக் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றையும் அவர்கள் நிறைவேற்றாவண்ணம் என்னைப் புறக்கணித்தார்கள். ஆனாலும் தேவனே எசெக்கியேல் இராஜாவிற்கு போல் அடையாளம் காட்டி, எனது காரியங்களை நிறைவேற்றி ஆசீர்வதிக்குமாறு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்." (1 தெசலோனிக்கேயர் 5:24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 04
ஞாயிறு

# நீ என்னுடையவன் என உரிமைகோரும் சேனைகளின் கர்த்தர்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 05-06

**"...:பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்."** (ஏசாயா 43:1)

பிரியமான தேவ பிள்ளைகளே! பறந்து காக்கிற **பட்சிகளைப் போல்** சேனைகளின் பரிசுத்த கர்த்தர் உங்களை இப்புதிய தினத்திலும் கரிசனையாக காத்து வழிநடத்துவராக! என வாழ்த்துகின்றேன். **ஏசாயா 43:3இல் நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் என் தேவன் தன்னை ஞாபகப்படுத்துகிறார்.** மேலே பிரதான தேவ வசனமானது **"பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன். உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்"** என மிக அன்போடும் மிக சமீபித்தும் வந்து அழைக்கிறார். இப்படியாக உங்களை பெயர் சொல்லி அழைக்கின்ற தேவ பிதாவின் குமாரனான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களின் அனைத்து காரியங்களும் **வெற்றியடைவதாக** என்றும் ஆவியில் நீங்கள் **பெருகுவீர்களாக**! என்றும் பிரார்த்திக்கின்றேன்.

அருமைமிக்கவர்களே! எனது குடும்பத்தில் எனது பெற்றோர் உட்பட ஒன்பது பேர்கள் ஆவோம். எனது இளைய சகோதரன் ஒரு விபத்தில் மரித்துப் போனார். மற்ற அனைவரும் பெண் பிள்ளைகளானபடியாலும், நான் அவர்களுக்கு வாட்டசாட்டமுள்ள ஒரே வாலிப மகனாகவும், வெள்ளை நிறமாகவும் இருந்தபடியால் என்னை மிகவும் நேசித்தார்கள். இப்படியாக என்னை அவர்கள் அழைத்தது செல்லாமக **'சின்னதுரை'** என்றாகும். இப்படியாக **தேவனும் உங்களை அளவற்று நேசிக்கின்றபடியாலும், உங்களைப் பெயர் சொல்லி அழைக்கின்றபடியாலும்** உங்கள் துன்பங்களில் ஆறுதல்படுத்தி போக வேண்டிய நேர்த்தியான பாதையை காட்டுவராக!

தேவனுடைய ஆறுதலைப் பெறத்தவிக்கின்ற தேவபிள்ளைகளே! சில பெற்றோர்கள் தம் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க பொருளாதார வசதிகள் இல்லாத காரணத்தினாலும், தமது ஆத்ம கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ளும்படியாகவும், பிள்ளையற்ற கணவன், மனைவிக்கு வளர்க்கும்படியாக பொறுப்பளித்துவிட்டு பிள்ளைகளை மறந்து விடுகின்றார்கள். அப்படியான பிள்ளைகளில் பலர் வாழ்வில் வேதனைப்பட்டு வளர்கின்றார்கள். ஆனாலும் **உங்களை ஒருபோதும் மறவாது காக்கும் தேவன் ஒருவர் இருக்கின்றார் எனப் பொருத்தனை பண்ணியிருக்கும் (ஏசாயா 49:15),** வசனத்தை வாசியுங்கள். அவர் மாறாத அன்பு கொண்ட நல்தகப்பனாவார். ஆகையால் எதிர்காலத்தைக்குறித்து பயங்கொள்ளாது **'நீ என்னுடையவன்'** என்றழைக்கும் தேவனை மாத்திரம் விசுவசியுங்கள். **கருத்தாகவும், ஊக்கமாகவும்** ஜெபித்து தேவனோடு ஒன்றிணைந்து கிட்டிச் சேர்ந்து வாழ்ந்து வாழ்வில் ஜெயம் பெறுங்கள். **வெற்றிகரமான நாள்**!

ஜெபம்

என் தேவனே! தாயின் கருவிலேயே என்னைத் தேர்ந்தெடுத்து எனது பெற்றோர்களைப் பார்க்கிலும் அன்புகாட்டும் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். நீர் என்னை பெயர்சொல்லி அழைக்கும் தேவன் என்பதால் உங்களுக்கு மகிமையுண்டாவதாக! இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை;..." (ஏசாயா 43:2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 05
திங்கள்

## வாக்குகளை நிறைவேற்றும் நமது தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 07–08

**"அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்."** (பரி.மாற்கு 16:20)

ஜீவனுள்ள தேவனுக்குச் சொந்தமான எனதருமை தேவபிள்ளைகளே! உங்களிடம் காணப்படும் **செயல்படாத ஒரு சொத்தை** எவ்வளவு பயபக்தியுடன் நீங்கள் வைத்துக்கொண்டிருப்பினும், அவைகளை எந்தெந்த வழிகளில் எவ்வளவாக **கௌரவப்படுத்தினாலும்,** அதனால் ஏற்படும் **பலன்** என்ன? ஏனென்றால் இப்படியாக உலகிலுள்ள **மாந்தீரிகம், சூனியங்கள்** என்பன செயற்படாதவைகளும், பிரயோஜன மற்றனவகளாகவும் இருப்பதனால் அவைகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். நித்தியகாலமாக எங்களைக் **காத்து,** எமக்காகவே **கிரியைகளை நடப்பிக்கின்றவரும்,** ஜீவனுள்ளவராகவும் வாசம் பண்ணும் ஒரே தேவன் என்னையும், உங்களையும் சமீபித்து எங்களுக்குள் வாசம் பண்ணுவது **எவ்வளவு பெரிய பாக்கியம்?** அத்தோடு அவரது **சொந்த பிள்ளைகளாக** எங்களை தெரிந்து கொண்டதும் எத்தனை மேன்மையான காரியம்? ஆகையால் அந்த **உன்னத, வல்லமையான இயேசு எனும் நாமத்தில்** இன்றும் **உங்கள் சகல காரியங்களும் வெற்றி பெறுவதாக** என்றும், இன்றும் **இயேசுகிறிஸ்துவின் காரியங்களை கண்ணாரக் கண்டு அநுபவிப்பீர்களாக!** என்றும் வாழ்த்துகின்றேன்.

பிரியமான தேவ பிள்ளைகளே! அன்று விகாரமகாதேவி வெளியரங்கத்தில் **பலவித பிரச்சினைகளோடு, எண்ணற்ற நோய்களோடு வந்திருந்த ஜனங்களோ** கணக்கில் சொல்ல முடியாத பெருந்திரளானவர்களாகும். ஜனங்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்ததேயன்றி குறையவில்லை. இப்படியாக ஜனங்கள் அதிகரித்தமையோடு **அற்புதங்களோடு, அதிசயமான கிரியைகள், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்** போன்ற அனைத்தையும் தொடர்ந்தும் தேவன் ஈந்தருளிக் கொண்டிருந்தார் என்றால் மிகையாகாது. **பிரதான தேவ வசனத்தின் பிரகாரம் 'கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியைகளை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். இப்பொழுதும் அவரது மகிமையான கிரியைகள்** குறைவுபடவில்லை. **ஆகையால் கலங்காதீர்கள்.**

உன்னத தேவனின் பிள்ளைகளே! இன்றைய நாளிலும் உங்கள் **வியாபாரங்கள், புதுவீட்டிற்கு அத்திவாரமிடுதல்,** தேவனது ஆராதனைகள் போன்றவைகளிலும் தேவன் உங்களுக்குள் இருக்கிறார் என விசுவாசித்து நடத்துங்கள். சந்தேகமின்றி சகலமும் **ஆசீர்வாதமாய் நடைபெறும்.** அத்தோடு **உங்கள் சாட்சி பெரிதாக** விளங்க தேவன் தயைகூருவார். **வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

அன்பின் தெய்வமே! கிரியைகள் நடைபெறாத, பயனற்றவைகள் மத்தியில் உங்கள் மகா வல்லமையால் நடைபெறும் அற்புத நிகழ்வுகளுக்காக ஸ்தோத்திரம். உங்கள் வசனத்தை உறுதிப்படுத்த வல்லமையான நிகழ்வுகள் இப்போது நிகழ்த்தும்படியாக இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்." (மீகா 7:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 06
செவ்வாய்

நான்
நானே கர்த்தர்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 09-10

**"நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை."** (ஏசாயா 43:11)

தேவ பிள்ளைகளே! தேவ பிள்ளைகளே! ***கர்த்தரின் மகிமைக்கென்று சிருஷ்டிக்கப்பட்டவர்களும், அவர் நாமம் தரிக்கப்பட்ட*** ஜனங்களாகிய நீங்கள், உங்கள் வாழ்வை மாற்றுகின்ற ஜீவமன்னா தினமஞ்சரியை கரமேந்தி வாசித்துக் கொண்டிருக்க தேவன் ஈந்தருளியிருக்கும் நந்நாளுக்காக ஸ்தோத்தரிக்கின்றேன். மேலே கூறியிருக்கும் தேவ வசனத்தில் **"நான் நானே கர்த்தர். என்னையல்லாமல் ரட்சகர் இல்லை"** என கர்த்தர் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் சத்திய ஆவியானவராகிய **ஜீவிக்கின்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவை** விசுவாசிக்கும் உங்களுக்கு பாவங்களிலிருந்து மீட்பும், சந்தோசமும், சமாதானமும், ஆறுதலும் கிடைக்கின்ற சுபமான நாளாகும் படியாக வாழ்த்துகின்றேன்.

தேவனுடையவர்களே! ***தன்னுடைய கரங்களிலேயே பல வித உருவங்களையும், பலவித தேவர்களையும்*** உருவாக்கி பக்திமிகு ஜனங்களாக உலகம் முழுவதும் கடந்து சென்று வழிபடுவதைக் காண்கின்றோம். ஆனாலும் இப்படியான பக்திமான்கள் கைகள், கால்களை துளைத்துக் கொண்டு, கொக்கி போன்றவைகளில் தம்மை மாட்டி தொங்கும் நிலையில் பல பூஜைகள் செய்து தங்கள் தெய்வங்களைத் தொழுது சந்தோஷப்படுத்துகின்றார்கள், ஆனாலும் அவைகளினால் எவ்வித ஆசீர்வாதத்தையும் அம்மனிதர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்? என்பதும், வல்லமையான காரியங்கள் நிகழ்கின்றதா? என்பதையும் சம்பந்தபட்ட மனிதர்களே அறிவார்கள். ஆனால் அவர்கள் மரபு முறை வழியாக அறியாமையின் காரணமாக வணங்குவதை மாத்திரமே முறையாக செய்யும் அவர்கள் பக்தியை நான் பாராட்டுகிறேன்.

**இயேசுகிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!** அற்புதத்தைக் காணும் காரியமொன்றை நான் உங்களுக்கு கூறுகின்றேன். **இயேசு கிறிஸ்துவை பாவங்களிலிருந்து மீட்கும் இரட்சகராக ஏற்றுக்கொண்டது பாவிகளும்,** அக்கிரமக்காரர்களுமே. பாவிகளை பாவங்களிலிருந்து மீட்டுக் கொள்ள தேவன் தனது வாழ்வை சிலுவை மரணத்துக் கொப்புவித்து, உதிரம் சிந்தி பலியாக்கினார். **(பரி.யோவான் 1:12)** தேவன் வல்லமையான கிரியைகள் செய்ய அதிகாரம் கொண்டார். **(பரி.யோவான் 14:12)** ஆகையால் இயேசு எனும் இரட்சகர் ஜீவிக்கின்றவராக இருப்பதால் உங்கள் அனைத்து காரியங்களிலும் இன்னும் ஜெயம் பெறுங்கள். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! அந்நிய மதபக்தர்கள் அவர்களின் சரீரத்தை துளைத்து அவர்களின் தெய்வத்தை சந்தோஷப்படுத்தினார்கள். ஆனால் எனக்காக சிலுவையில் தன் உயிரை பலியாக ஒப்புக்கொடுத்த என்னை மீட்டீர் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கப்பண்ணினேன்; உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன்இல்லை;..." (ஏசாயா 43:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 07
புதன்

உலக வாழ்வுக்கான
உபத்திரவாங்கள்
வீணானது!

வேதவாசிப்பு
யோபு
அதி: 11–12

**"ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார்."** (மல்கியா 3:2)

பிரியமானவர்களே! என்றுமே மாறாத அன்பைக் கொண்ட இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் அன்பு நாமத்தில் இன்றைய நாளில் உங்களை வாழ்த்துகிறேன். சர்வ வல்லவரின் தேவ பிள்ளைகளே! **உங்களை ஜீவிக்கச் செய்கின்ற, உங்கள் ஆத்துமாவை பெலப்படுத்துகின்றவரும், ஆசீர்வாத வழிகளைக் காட்டுகிறவருமான** தேவ ஆவியானவரின் வெளிப்படுத்தல்களைத் தன்னகத்தே கொண்ட **ஜீவ மன்னா தின மஞ்சரியை** கரங்களில் கொண்டுள்ள நீங்கள் பாக்கியவான்கள் ஆகையால் இன்றைய நாள் வெற்றியான பாதைகளில் பயணித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

அன்புக்குரியவர்களே! நீங்களும், நானும் நமது வாழ்வை ஆரம்பித்த நாள் தொடக்கம் இந் நேரம் வரை பிரச்சனைகளுக்கு முடிவு இல்லை என்பதை அறிகின்றோம். அப்படியே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பும் **உபத்திரவங்கள்** அதிகரித்ததேயொழிய குறைந்ததாக தெரியவில்லையல்லவா? அப்படியாயின் நீங்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் மேலே கொடுக்கப்பட்டுள்ள பிரதான தேவ வசனத்தின் படி வண்ணான் என்பவன் புடவைகளை அழுக்கு நீங்க சவக்காரமிட்டு மிகவும் துப்பரவாக வெண்மையாக துவைத்தெடுப்பதைப் போல் உங்களை எதிர்நோக்கி வரும் இக்கட்டுகளுக்கு இடங்கொடுத்து ஆவியானவருக் கூடாக **அக்கிரமங்கள் நீங்க பரிசுத்தப் படுத்துகிறார்.**

**தேவ ஆவியில் பெலன் பெற்ற தேவபிள்ளைகளே!** நீங்கள் உபத்திரவப்படுவது உலகக் காரியங்களை பெற்றுக் கொள்ளும் படியாக என்றால் அது வீணானதாகும். ஆனால் **தேவ இராஜ்யத்தின் நற்செய்திகளுக்காக** உபத்திரவப் படுவீர்களெனின் இவ்வுலகில் மாத்திரமன்றி **பரலோகத்திலும் ஆசீர்வாதம் பெற்றவராவீர்கள்.** ஆகையால் உலகில் பல வழிகளில் உபத்திரவங்களுக்குள்ளாகிடும். மனிதர்களுக்கு மென்மையான இரட்சகரை அறிமுகப்படுத்தும்படியாக **ஜீவமன்னா தினமஞ்சரி புத்தகங்கள், நற்செய்தி ஒலி நாடாக்கள், நற்செய்தி துண்டு பிரதிகள்,** என்பவற்றை கொடுக்க தீவிரமாய் செயல்படுத்துங்கள். அப்பொழுது இவ்வுலக இன்னல்கள், இடையூறுகள் அனைத்தையும் நன்மைகளாக மாற்றி, அவை உங்கள் வாழ்க்கை பரிசுத்தமாக்க, ஆசீர்வாதங்களை அளிப்பாராக! உங்களுக்கு இன்னும் **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! நீங்கள் எனக்கு உபத்திரவங்களை அனுமதித்து சலவைத் தொழிலாளி போல் செயல் பட்டு, பரலோக இராஜ்யத்திற்கு என்னை தகுதியாக்கியமையால் ஸ்தோத்தரிக்கின்றேன். இன்று முதல் உங்கள் நற்செய்தி கொண்டு செல்ல என்னை ஆயத்தப்படுத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிறகாலங்களில் அவரே தஞ்சமானவர்." (சங்கீதம் 9:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமாய்க் கொடுத்து தேவனுக்கு பிரியமுள்ளவராகுங்கள்!



**"பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்."** (2 கொரிந்தி 9:6)

தேவனுடையவர்களே! கர்த்தர் எம் நினைவாக இருக்கிறார். அத்தோடு **இவ்வுலக ஆசீர்வாதங்களையும்** **பரலோக ஆசீர்வாதங்**களையும் அளிக்க **வல்லவராயிருக்கிறார்.** தோட்டத்தில் மரங்களுக்கிடையில் சூரியனின் கதிர்கள் பொன்னிறமாக நெற்கதிர்கள் மீது படர்ந்து காட்சியளிப்பதைக் கண்டிருக்கின்றீர்களா? விவசாயிகள் மிகவும் கடினமாக உழைத்து இப்படியாக வயல்களில் வளமான அறுவடை ஏற்பட காரணமாக விளங்குகின்றார்கள் என்பதை எண்ணியிருக்கிறீர்களா? இப்படியாக உங்கள் உள்ளமெனும் வயலில் **நீதியெனும் விதைகள் விதைக்கப்படுவதாக!** என்றும் உங்கள் எதிர்காலம் வளம் பெறுவதாக என்றும் இயேசு எனும் பரிசுத்த நாமத்தில் பிராத்திக்கின்றேன்.

அன்புடையோரே பெரும்பாலானோர் தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்துக் கொண்டவைகளை மற்றவர்களுக்கு கொடுக்க விரும்பமாட்டார்கள். ஏனென்றால் அவர்களதும் அவர்களது பிள்ளைகளினதும் பலவிதமான பிரச்சனைகளுக்கு ஒரே பதிலாக அவர்கள் காணுவது அவர்கள் சேர்த்துக் கொண்ட **பணம், உடமை** என்பவைகளே. ஆனாலும் தேவ இராஜயத்தின் காரணமாக விதைத்தவைகள், உழைத்து சேர்த்துக் கொண்டவைகள், முன்னயவைகளிலும் பார்க்க **வரையற்ற ஆசீர்வாதங்களே** என்பதை அநேகர் அறியாது இருக்கிறார்கள். இது மிகவும் கவலைக்குரியதாகும். ஆகையால் மேலே கூறப்பட்ட பிரதான தேவவசனத்தில் இப்படியாக பவுலடியார் கொரிந்திய வாசிகளுக்கு எழுதுகின்றார். **"சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்"** என்றாகும்.

அருமையானவர்களே! நீங்கள் விதைக்க வேண்டியது **உடமை, சொத்துக்கள், பணம் மாத்திரமன்று.** உங்களிடம் பணம் இல்லாவிடின் ஒவ்வொருக்காக ஜெபம் பண்ணுவதும், தேவவசனங்களைக் **கற்றுக் கொடுத்தலும், நற்குணமுடையவர்களாக பிறரை அன்புடன் வழி நடத்துதல்** போன்றவற்றினால் தேவனுடைய காரியங்களை மேற்கொள்கின்றவேளை தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். உங்கள் தேவைகளின் போது மாத்திரமன்றி, எல்லாவற்றிலும் பெருக விதையுங்கள் பெருக்கத்தைப் பெறுவீர்கள் உங்கள் வாழ்வில் சுய நலத்தை நாடாது மானிடர் யாவரும் நலம் பெற்று ஆவியில்பெருகி வாழ ஜெபியுங்கள். **பெருக்கத்தின் நாள்!**

ஜெபம்

அன்பின் பிதாவே! நான் எதிர்காலத்தைக் குறித்து பயந்து சொத்துக்களை சேர்த்துக் கொண்டேன். மற்றவர்களுக்கு எதையும் கொடுக்க மனதில்லாதிருந்தேன். இன்று முதல் சிறுக விதைத்து பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...;உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." (2 கொரிந்தி 9:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 09
வெள்ளி

# சகல நோய்களையும் குணமாக்கும் சேனைகளின் கர்த்தர்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 15-16

**"கர்த்தர் சகல நோய்களையும் உன்னைவிட்டு விலக்குவார்; உனக்குத் தெரிந்திருக்கிற எகிப்தியரின் கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணாமல்,..."**
(உபாகமம் 7:15)

பேரன்புக்குரிய தேவபிள்ளைகளே! இயேசுகிறிஸ்து நமது பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நோய்களைச் சுமந்தார். இன்று நீங்கள் ***புது சிருஷ்டி,*** உங்கள் வாழ்வைக் குறித்தயாவும் புதிதாய் மாறுவதாக என இன்றைய நாளிலும் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன். ***ஏசாயா 58:8ல்*** உன் ***சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து*** எனக் கூறப்பட்டுள்ளதால் உங்களை இக்காலைப் பொழுதினிலே தேவவசனங்களால் பலப்படுத்துகின்றேன். புதிய ஆரோக்கியத்துடன் இன்றைய நாளிலும் முன்னோக்கிப் பயணியுங்கள்.

தேவனுக்குப் பிரியமானவர்களே! நிகழ்கால உலகில் மனிதவாழ்வில் ஏற்படும் உபத்திரவங்கள் அநேகமாயிருக்கின்றன. அவைகளில் நோய்கள் முதலிடத்தை வகிக்கின்றது. இப்படியாக இன்று உலகம் முழுவதும் குணமாக்க முடியாத புற்றுநோய் அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. இன்னுமாக **இரத்தப் புற்று, எய்ட்ஸ்** போன்ற பயங்கரமான நோய்களும் முதலிடத்தை பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் தேவனுடைய வசனங்களை வாசிக்கின்ற ***ஜீவ மன்னா*** வாசகர்களாகிய நீங்கள் ஒன்றையும் குறித்து கவலை கொள்ளாது எங்கள் தேவன் இயேசுகிறிஸ்துவின் பேரில் உங்கள் முழு விசுவாசத்தையும் வையுங்கள். ஏனென்றால் உலக மனிதர்க்கு ஏற்படுகின்ற நோய்களில் ஒன்றாகிலும் தேவன் தனது பிள்ளைகளுக்கு ஏற்பட இடமளியேன் என்று **சங்கீதம் 103:3** லும் **ஏசாயா 53:5** போன்ற வசனங்களிலும் அறிவித்துள்ளார். வைத்திய சான்றிதழ்களுக்கு மேலாக உங்களுக்கு சுகத்தைக் கொடுக்க தேவன் வல்லமையானவர் என்பதால் கவலைப்படாதிருங்கள். ஏனென்றால் தெய்வீக சுகத்தைப் பெற்றசாட்சிகள் வைத்திய சான்றிதழ்களோடு எம்வசமிருக்கின்றன.

அருமையானவர்களே! உங்கள் சரீரத்தில் ஏற்படுகின்ற நோய்களின் அறிகுறிகளைக் குறித்து பயப்படாதீர்கள். **எனது 34 வருட ஆத்மீக வாழ்வில் புற்று நோயாளிகள், லியுகேமியா** போன்ற பிணியாளிகள் என்னைச் சந்தித்துள்ளார்கள். அசுத்த ஆவிகள் சரீரத்தில் நுழைந்து நோய்களை உருவாக்குகின்றன. தேவன் கொடுத்த **(பரி.மத்தேயு 18:18)** அதிகாரத்தின் படி விசுவாசத்தோடு அசுத்த ஆவிகளை விரட்டுங்கள். உலகில் யாராலும் செய்ய முடியாதவைகளை விசுவாசத்தோடு மேற்கொள்கின்ற போது **தெய்வீக சுகத்தை** தேவன் தந்தருளுவார். **வெற்றிகரமானநாள்!**

ஜெபம்

என் தேவனே! உலகிற்கே குணமாக்க முடியாத நோய்கள், உங்களின் கசையடிகளால், ஆறாக பெருகியோடிய மாசற்ற திரு இரத்தத்தினால் சுகமாக்க முடியுமாதலால் ஸ்தோத்தரிக்கின்றேன். நோய்களிலிருந்து மீட்டு, சுகப்படுத்தி ஆசீர்வதிக்குமாறு ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்."
(எரேமியா 33:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 10
சனி

தேவனே அல்பா,
ஒமேகாவாக
இருந்து வழிநடத்துவார்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 17–18

**"...குருடனுக்குக் குருடன் வழிகாட்டக்கூடுமோ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா?"** (பரி.லூக்கா 6:39)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! **உயர்வான வாழ்க்கை** கிறிஸ்துவுக்குள் நமக்குண்டு. அதுவே ஆவிக்குரிய வாழ்க்கை. அது சாதாரண வாழ்க்கையல்ல. காயப்படுபவர்களாக அல்ல வெற்றியாளர்களாக பிறந்த உங்கள் ஒவ்வொருவரையும் இயேசுகிறிஸ்து எனும் ஒப்பற்ற நாமத்தில் வாழ்த்துகிறேன். **சங்கீதம் 141:8ல்** தாவீது இராஜா **"கர்த்தாவே என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது. உம்மை நம்பியிருக்கிறேன். என் ஆத்மாவை வெறுமையாக விடாதேயும்."** எனக் கூறியிருப்பதை ஜெபத்துடன் தியானியுங்கள். தேவ ஆவியானவர் உங்களை வழி நடத்திச் செல்வார். ஆத்துமா இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் பெலப்படுவதாக!

அருமைமிக்கவர்களே! உலகில் மனிதர்களின் மத்தியில் எமக்கு வழிகாட்டுபவர்கள் அநேகர். எமக்கு **நன்மையான போதனைகளைத் தந்து, அறிவிலும், நற்குணங்களிலும் போசித்து பெற்றோர்கள், உயர்ந்தவர்கள்** எமக்கு வழிகாட்டுகிறார்கள். இப்படியாக எம்மை எதிர்கொள்கின்ற பலவித இடையூறுகளின் நிமித்தம் குருடாகி விடுகின்றோம். அப்போது எமது நண்பர்கள் உறவினர்களில் சிலர் அவைகளில் தப்புவதற்கு மாற்று வழிகளை காட்டுகிறார்கள். ஆனாலும் சிக்கல்களில் நாம் குருடாகியிருக்கும் போது தமது **சுயநலத்திற்காக** வழிகாட்டுபவர்களும் சமுதாயத்திலிருக்கிறார்கள். அப்படியானவர்களின் கண்கள் சாத்தானால் குருடாக்கப் பட்டிருப்பதோடு அவர்களது வழிநடத்துதலைப் பெறும் நாமும் அழிவுக்குட்படுத்தப்படுவோம். மேலே கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தில் **"குருடனுக்கு குருடன் வழிகாட்டக் கூடுமே இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா"** எனக் கூறப்பட்டுள்ளது.

பிரியமானவர்களே! மனிதர்களின் வழிநடத்துதல்களின் படி நடவாது தேவ ஆவியானவரின் ஆலோசனைகளை காலை ஜெபத்தில் பெற்று **எமது சிந்தனை, சொல், செயல்யாவற்றிலும்** ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தேவ வழிநடத்துதலில் ஒருபோதும் நீங்கள் தீமைகளை பெறமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்கு **அல்பா, ஒமெகாவாக** இருந்து காரியங்களில் **ஜெயத்தைத் தருவாராக!** தேவனை ஜெபத்தில், வசனங்களில் கிட்டிச் சேர்த்து விசுவாசத்தோடு பயணியுங்கள். **வெற்றிகரமானநாள்!**

ஜெபம்

என் பிதாவே! மனிதர்களின் வழிகாட்டுதலைப் பெற்று மிகுந்த இக்கட்டுக்குள்ளா-
னேன். இன்று முதல் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெற
அதிகாலையில் ஜெபித்து என் உள்ளத்தில் அவர் கூறுவதின் படி நடந்து செல்ல
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்." (சங்கீதம் 73:24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 11
ஞாயிறு

போதுமென்கிற
திருப்தியான மனதோடு
ஜீவியுங்கள்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 19-20

**"போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்."**
(1 தீமோத்தேயு 6:6)

அன்பு நிறைந்த தேவ பிள்ளைகளே! மனிதர்களாகிய **நாம் சொத்து சம்பத்துக்கள்,** வீடு போன்றவைகளை உரிமையாக்கிக் கொள்ளவே வாஞ்சை மிகுந்தவர்களாக இருக்கின்றோம். எல்லா மனிதர்களும் உலகத்தைச் சார்ந்தவர்களல்ல. தேவனால் அழைக்கப்பட்டவர்கள். உலகில் சாதாரண மனிதர்களைப் பார்க்கிலும் வித்தியாசமான வாழ்கையை பெற்றிருக்கிறார்கள் என்பதை தேவ வசனங்களுக்கூடாக அறிகிறோம். அப்படியாக தேவன் விருப்பத்தின்படி உடமைகளை அளிக்கின்றார். ஆவிக்குரிய பிள்ளைகளான நாம் ஒரு போதும் மற்றவர்களுக்கு கிடைத்திருக்கும் **ஆத்மீக வரங்கள், லௌகீக செழிப்பு** என்பவற்றைக் குறித்து பொறாமை கொள்ளக்கூடாது. இப்பொழுது உங்களுக்குக் கிடைத்திருப்பதைக் குறித்து போதுமென்கிற மனதோடும் மனச்சந்தோஷத்துடன் தேவனுக்கு நன்றி செலுத்தி **தேவ பிரசன்னத்தைப் பெறும் நந்நாளாகுவதாக!** என்றும் அனைத்து காரியங்களும் இன்று வெற்றி பெறுவதாக! என்றும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

பிரியமுள்ளவர்களே! **பரி.மத்தேயு 20 வது** அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து உவமையொன்றைக் கூறுகின்றார். திராட்சத் தோட்டத்தின் சொந்தக்காரன் வேலையாட்களுக்கு நாளொன்றுக்கு **ஒரு பணம்** கூலிபேசி அவர்களைத் தன் திராட்சைத் தோட்டத்திற்கு அனுப்பினான். மூன்றாம் மணி வேளையிலும் வேறு சிலரை அனுப்பினான். 5வது வசனத்தில் ஆறாம், ஒன்பதாம் மணி வேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான். **11ம் மணி** வேளையில் இன்னும் சிலரை அனுப்பியதாகக் கூறப்பட்டுள்ளது. சம்பளம் கொடுத்ததாகவும், முந்தி அமர்த்தப்பட்டவர்கள் அதற்கு பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேர மாத்திரம் வேலை செய்தார்கள். எங்களுக்கு **இவர்களைச் சமமாக்கினீரே** என முறுமுறுத்தார்கள்.

அன்பு மிகுந்தவர்களே! திராட்சைத் தோட்டத்து எஜமான் **"உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ, உனக்கு கொடுத்ததைப் போல பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம்"** என பதிலளித்தார். மேலே கூறப்பட்ட உவமையில் கூறியுள்ளதன்படி **போதுமென்று திருப்தியுடன் வாழுங்கள்.** பொறாமைக் கொள்ளாதீர்கள். உங்கள் **தேவபக்தி மிகுந்த ஆதாயமொன்று** நினையுங்கள் இன்று **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! திராட்சத் தோட்டத்து எஜமானாகிய நீங்கள் எனக்குத் தந்திருக்கும் மகிமையான காரியங்களுக்கு நன்றி கூறுகின்றேன். போதுமென்கிற மனதுடனே எப்போதும் மனதிருப்தியுடன் உங்கள் ஊழியக் காரியங்களைச் செய்ய என்னை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்."
(1 தீமோத்தேயு 6:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 12
திங்கள்

## பற்றாக் குறைகளை சம்பூரணப்படுத்தும் ஐசுவரியத்தின் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 21-22

**"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்."** (பிலிப்பியர் 4:19)

தேவ பிள்ளைகளே! இருந்தவரும் இருக்கிறவரும் வரப் போகிறவருமாகிய நம் சேனைகளின் **பரிசுத்தராகிய கர்த்தர் இவ்வுலகில் தமக்கென்று வேறு பிரித்த** தேவ பிள்ளைகளே! விண்ணப்பிக்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மேலாக அதிகமாக ஈந்தருளும் தேவனை முழு உள்ளத்தோடு ஸ்தோத்தரிக்கின்றேன். அன்பான பிதாவானனரின் மகனான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் உங்கள் **கஷ்டம், வறுமை,** அனைத்தும் நிர்மூலமாகி எதிர்பாக்கின்ற காரியங்கள் பூரணமாகி முன்னோக்கி செல்ல நன்மையான நாளாகுவதாக! என வாழ்த்துகிறேன். இன்னுமாக 50.00 ரூபாவாகிலும் கையில் இல்லாது ஆரம்பித்த தேவனின் இவ் ஊழியமானது **இன்று இலங்கையிலே பிரபலமான** சபையாக விளங்க தேவன் தயை கூர்ந்தார்.

அருமையானவர்களே! உங்கள் வாழ்வில் மிகுந்த சுமையாக இருக்கின்ற பொருளாதார பற்றாக் குறைகளை நீக்கும் நாள் மிக விரைவிலேயே, என்பதால் கலங்காதீர்கள். தேவன் சம்பூரணப்படுத்துவார். மேலே கூறப்பட்ட தேவ வசனத்தை **வாக்குத்தத்தமாக** தியானித்து செபியுங்கள். உங்கள் ஆசீர்வாதம் தாமதமாகின்ற போது உங்களின் விசுவாசம் அற்றுப் போக இடங்கொடாது எல்லாத் தடைகளும் நீங்கி **ஆசீர்வாதங்களுக்கு பாத்திரராகும்** வரை உங்களை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல **தேவன் உங்களோடிருப்பாராக!** இன்னுமாக இப்பூலோக ஆசீர்வாதங்களைப் போன்று உங்களுக்கு அன்றன்று தேவைகளைச் சந்திப்பது தேவனுக்கு இலகுவான காரியமாகும்.

என் அன்பு தேவ பிள்ளைகளே! எங்களுக்கு **பேருந்து (பஸ்) வண்டியொன்று** அவசியமான போது **இத்தாலி** நாட்டிலிருந்து வந்த ஒரு அறிமுகமற்ற சகோதரியான **சுவர்ணா** என்பவர் புதிதான பேருந்தை எங்களுக்கு நன்கொடையாக அளித்தார். தேவன் **"யெகோவாயீரே"** அனைத்தையும் கொடுப்பவர் எனும் நாமத்தில் **ஆதியாகமம் 22:14** இல் அறிமுகமாகின்றார் **பரி.மத்தேயு 6:33** இல் **"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும்."** எனக் கூறப்பட்டுள்ளமையால் இப்பொழுது வாடகை வீடுகளில் வசித்துக் கொண்டு இப்புத்தகத்தை வாசிக்கின்றீர்களா? ஆனாலும் குறுகிய காலத்தில் சொந்த வீட்டிலிருந்து **ஜீவ மன்னா தினமஞ்சரியை** வாசிக்க தேவன் ஆசீர்வதிப்பார். பற்றாக்குறை நீங்கி ஆசீர்வாதமாக வாழ தேவன் தயை செய்தருளுவார். **ஆசீர்வாதத்தின் நாள்!**

**ஜெபம்**

என் பிதாவானவரே நான் இவ்வளவு காலமாக உங்கள் மகிமையின் பிரகாரம் குறைகளை சம்பூரணப்படுத்துவீர்கள் என்பதனை அறியாதிருந்தேன். உங்கள் தேவ இராஜ்யத்தை தேடுகின்ற போது என்னை ஆசீர்வதீப்பீர்களென அறிந்து இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...;ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்." (2 கொரிந்தி 12:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 13
செவ்வாய்

## தள்ளின கல்லை மூலைக்கல்லாக்கும் தேவன்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 23-24

**"யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்."** (பரி.யோவான் 4:9)

சர்வவல்லவரின் அன்பு நிறைந்த தேவபிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் **தெரிந்துகொள்ளல், அழைப்பு** என்பவைகள் பரலோக இராஜ்யத்தின் சித்தமே என்பதை நான் அறிந்தும், கண்களினால் கண்டுமிருக்கிறேன். ஆகையால் உலக மனிதர்கள் அனைவரும் தேவபிள்ளையான உங்களை **இழிவுப்படுத்தி, புறக்கணித்து, வேண்டாமென்றாலும்** உங்கள் இரட்சகர் இயேசு கிறிஸ்து உங்களை அதிகமாக நேசித்து உங்களைத் தேடி வருவார். ஆகையால் இக்காலைப் பொழுதிலும் தெய்வீக அன்பிற்கு அடிமைப்பட்ட உங்களை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் சொந்த காரியங்கள் வெற்றிப் பெறுவதாக என்றும், தேவ அன்பைச் சார்ந்து வாழவும் வாழ்த்துகிறேன்.

தெய்வீக அன்பைப் பெற்று வாழும் அருமையான தேவபிள்ளைகளே! பிரதான வேதவசனத்தில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் **யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்கள்** என்று காண்கிறோம். ஏனென்றால் **யூதர்கள்** சமாரியர்களைப் பார்க்கிலும் சமுதாயத்தில் உயர்ந்தவர்கள் என்ற மதிப்பைப் பெற்றிருந்தார்கள். மேலே பிரதான வசனத்தில் கூறப்பட்டுள்ள **சமாரிய ஸ்திரி ஐந்து புருஷர்களோடு வாழ்ந்து கைவிடப்பட்டு** ஆறாவது புருஷனோடு வாழ்கின்றாள். அவளது வாழ்க்கைச் சரித்திரத்தை அறிந்திருந்த அப்பிரதேச வாசிகள் அவளைப் புறக்கணித்து, இழிவுப்படுத்தினார்கள். ஆனாலும் **இயேசு சுவாமி தேடி வந்தது** அவ்வண்ணமான பெண்ணையே. ஆகையால் கலங்காதிர்கள்.

பேரன்புக்குரியவர்களே! நீங்களும் சமூதாயத்தில், குடும்பத்தில், உறவினர்கள் மத்தியில் புறக்கணிக்கப்பட்டு வாழ்வீர்களாயின் உங்களைப் போலொரு அதிர்ஷ்டக்காரர் இவ்வுலகில் யாருமில்லை. ஏனென்றால் இயேசு சுவாமி உங்களைத் தேடி வருகின்றார். நீங்கள் **"இயேசுவே என அழைக்கும் போது"** ஆம் **என் மகனே! மகளே!** என அரவணைத்து உங்கள் கண்ணீரை தன் கரங்களால் துடைத்திடுவார். உங்களைப் போல் அதிர்ஷ்டசாலி யாருமே இல்லை என நீங்கள் **நிறைவான மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வீர்கள்.** சுமைகளெல்லாம் நீங்கி **ஆறுதலையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும், விடுதலையையும்** பெற்று வாழ்வீர்கள். **மகிழ்ச்சிகரமான நாள்!**

ஜெபம்

அன்பான பிதாவே! என்னை குடும்பத்தார்கள், சமுதாயத்தினர் மத்தியில் புறக்கணித்து வெறுத்துவிட்டார்கள். அன்று சமாரிய ஸ்திரியை உங்கள் மகன் தேடி வந்து மீட்டதுபோல என்னையும் மீட்டெடுத்து உயர்த்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று;" (பரி.மாற்கு 12:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 14
புதன்

## விசுவாசமும், வெற்றிவாழ்வும்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 25-26

**"இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு:.. .ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்."** (பரி.மாற்கு 5:27,28)

அன்பின் தேவபிள்ளைகளே! ஈடு இணையற்ற வல்லமையான இயேசுவின் நாமத்தில் உங்களை இன்று வாழ்த்துகின்றேன். **"...வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது"** என **பரி.மத்தேயு 28:18** இல் எழுதப்பட்டுள்ளது. **எபிரேயர் 12:1** இல் கூறுகின்றதைப் போல் **"...,நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;" என்று இன்றைய நாளிலும் தடைகளை தள்ளிவிட்டு விசுவாசத்தோடு** முன் செல்லுமாறு உங்களுக்காக பிரார்த்திக்கின்றேன். அத்தோடு மரணத்தை வென்று உயிரோடெழுந்த சர்வ பராக்கிரம தேவனுக்குள் நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தினால் நீங்கள் ஒரு போதும் காணாத விஷேசித்தவைகளை, ஆச்சரியமானவைகளை காணும் பாக்கியத்தைப் பெறுவீர்களாக! **அதர்சனமானவைகளை விசுவாசத்தில் மாத்திரமே ஜெயங் கொள்ள முடியும்.**

பிரியமானவர்களே! உங்களுக்கு அல்லது எனக்கு மிக விசாலமாகத் தெரிகின்ற பிரச்சினையை தேவனுக்கு மிகச் சுலபமாக தீர்க்க முடியும். ஆனாலும் உங்களுக்கும் எனக்கும் அவசியமானது **கடுகை போன்றமிகச் சிறிய விசுவாசம் மாத்திரமே. (பரி.மத்தேயு 17:20) வைத்தியரால் கைவிடப்பட்ட பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவைக் குறித்தும் கேள்விப்பட்டு நான் அவருடைய வஸ்திரங்களைத் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி அவருடைய வஸ்திரத்தை தொட்டாள்** என மேலே பிரதான வசனம் கூறுகிறது. அவள் விசுவாசத்தோடு தொட்ட வேளை அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்று போயிற்று என **பரி.மாற்கு 5:29**இல் எழுதப்பட்டுள்ளது. எனவே நீங்கள் கவலைப்படாதீர்கள்.

தேவனுடையவர்களே! எங்களுடைய ஏதாவதொரு பிரச்சினை மிகவும் விசாலமான மலைப் போன்று வருவது நாங்கள் எடுக்கும் உடன் தீர்மானத்தினாலேயே ஆகும். அத்தோடு எமது விசுவாசமின்மையுமாகும். அசையாததும், உறுதியானதுமான விசுவாசத்தை உள்ளத்தில் ஏற்படுத்திக் கொண்டு அதன்படி கிரிகை செய்து எத்தகைய பிரச்சினை யெனினும் சம்பூர்ணப்படுத்திக் கொள்ள முடியும் விசுவாசத்தோடும், உறுதியான எண்ணத்தோடும் முன்னோக்கி பயணித்து **இன்றும் வியாதியிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் வெற்றிப்பெறுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் பிதாவே! ஜனங்களுக்கு பயப்படாது விசுவாசத்தோடு கிரிகைகளை சம்பூர்ணப்படுத்திய பெரும் பாடுள்ள ஸ்திரீ குணமானது போன்று எனது விசுவாசத்தையும் உறுதிப்படுத்தி மலை போன்ற பிரச்சினைகளையும் வெற்றி கொள்ள தயை செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்."
(யாக்கோபு 1:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 15
வியாழன்

நான் பிதாவானால்
என் கௌரவம் எங்கே?
எனசேனைகளின்
கர்த்தர் கேட்கிறார்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 27–28

**"...;நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்;..."** (மல்கியா 1:6)

பிரியமான தேவபிள்ளைகளே! அருமையான இக்காலைப்பொழுதில் எம்மை மறவாத தேவனின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை உளமாற வாழ்த்துகிறேன். **ரோமர் 8:28 இல் ...தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.** என்றெழுதப்பட்டுள்ளது. ஆகையால் தேவனை உள்ளத்தில், வசனத்தில், செய்கையில், முழு ஆத்துமாவிலும், கௌரவப்படுத்தும் உங்களை இயேசு கிறிஸ்து மிகவும் நேசிக்கிறார். உங்களின் அனைத்து காரியங்களும் ஈடேறுகின்ற நாளாக பிரார்த்திக்கின்றேன்.

தேவனுடையவர்களே! நாம் ஆராதித்து முழு உள்ளத்தோடு கனப்படுத்தும் சர்வ வல்லவரான மகத்துவ தேவன், விண்ணுலகில் வாசம் பண்ணும் பிதாவானவராவார். இப்படியான மகத்துவ தேவனின் பிள்ளையும் விசுவாசியுமான நாம் நமது தேவனோடு இடைப்படும் வேளையில் தேவனை கௌரவப்படுத்தி, பயபக்தியோடு செயற்படவேண்டும். பிரதான தேவ வசனத்தில் **"...;நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்;..."** என்று சேனைகளில் கர்த்தர் தமது நாமத்தை அசட்டை பண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்.

கனம் பொருந்திய சபைப் போதகர்களே! விசுவாசிகளே! இன்று சபைகளுக்குள் தேவனுக்குக் கொடுக்க வேண்டிய கனம், கௌரவம் மிகவும் அருகிப் போயுள்ளது. அது மாத்திரமன்றி விசுவாசிகளும், சபைப் போதகர்களும் ஒன்று கூடி ஆராதிக்க தமது ஆசனங்களிலிருந்து எழுந்து ஜெபம் பண்ணாது, அஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் எமது முதல் கௌரவம், கனம் தேனுக்குக் கொடுத்தாக வேண்டும். ஜீவ மன்னா வாசகர்களாகிய நீங்கள் உங்கள் சுய கௌரவத்தைத் தேடாது, பரலோக தேவ பிதாவானவரை முழு உள்ளத்தோடு கனப்படுத்திப் பாருங்கள். சபைப் போதகர்களே! உடன்ஊழியர்களே! உங்கள் சபையில் தேவனைத் துதிக்கும் ஆராதனைகளை அதிகரித்துப் பாருங்கள். தேவ அபிஷேகம் உங்கள் முழு சபையையும் ஆட்கொள்ளும். உங்கள் வாழ்வில், இல்லத்தில், நீங்கள் இருக்கும் இடம் ஆசீர்வாதத்தினால் நிறைந்து காணப்படும். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! தனது சுய கௌரவத்தை தேடுவோர்க்கு மத்தியில் நானும் ஒருவன் என்பதை நானறிவேன். ஆனாலும் உங்கள் தேவச் செய்தியின் படி நான் உங்களை கனப்படுத்த உங்களைத் தேடி வந்தேன். இன்றுமுதல் என்னை பெலப்படுத்தி என்னை ஆட்கொள்ளும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...;என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டைபண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (1 சாமுவேல் 2:30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவசனங்களை
நேசித்து, மதித்து
நடவுங்கள்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 29–30

**"திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்; கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்."** (நீதிமொழிகள் 13:13)

அன்பார்ந்த தேவபிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நிகரற்ற நாமத்தினால் உங்களை வாழ்த்துகின்றேன். இப்புதிய நாளின் ஆரம்ப வேளையிலே ஜீவ மன்னா தினமஞ்சரி மூலமாய் புதிய ஜீவ வார்த்தைகளை உங்கள் முன் வைக்கின்றேன். கர்த்தருடைய வாய்மொழிவார்த்தைகள் உங்கள் **ஆத்துமாவையும், ஜீவியத்தையும்** புதிதாய் மாற்றி அவரது சந்திதானத்தில் உங்களை நிறுத்த வல்லமையுடையதாயிருக்கிறது. **பரி.மத்தேயு 24:35** கூறுகிறது. **"வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை"** என இதன் மூலம் இயேசுகிறிஸ்து ஜீவ வார்த்தைகளின் விசுவாசத்தையும், உறுதியையும் விளங்கப்பண்ணியுள்ளார். இன்றும் தேவவார்த்தைகளை வாசித்து, கற்று தேர்ச்சிப்பெற்றவர்களாய் வாழுங்கள்.

தேவபிள்ளைகளே! இன்றைய எம் தலைப்பு சத்தியவசனம் **"திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான். கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்"** என்றுரைக்கிறது. இப்படியாக தேவன் கூறியிருப்பது ஏன்? இந்நாட்களில் வேதாகமத்தை வாசித்து தியானிக்கவோ, கிரியைகளில் செயல்படுத்தவோ ஆத்துமீக வாழ்வினை கட்டியெழுப்பவோ ஆர்வமற்றவர்களாய் அசதியாய், மந்தமான நிலையில் தேவபிள்ளைகள் காணப்படுவதலாகும். இன்னுமாய் ஆத்மீக கிறிஸ்தவர்கள் முதற்கொண்டு முகநூல், தொலைக்காட்சி நிகழ்ச்சி தொடர்கள், இணையத்தள ஒளிபரப்புக்கள் இவைகளின் ரசனையிலே தம் காலங்களை கடத்துகிறார்கள். கிடைக்கும் ஒருசிறுகால அவகாசத்தைக் கூட இதற்கென்று பயன்படுத்தி உலக இன்பம் அநுபவிக்கிறார்கள். **தேவ வார்த்தைகளை** வாசித்து கடைபிடித்து **சத்தியபாதையில்** நடக்கமுடியாதவர்களாயிருக்கிறார்கள்.

பிரியத்திற்குரியவர்களே! இந் நவீனயுகத்திலே வேதாகமம் தொழில்நுட்ப முறையிலே கைபேசிகள், கணணி, டெப் (ஈமெயில்) போன்றவற்றில் காணக்கூடியதாயிருக்கிறது. ஆகையால் எங்ஙனமாவது தேவவார்த்தைகளின் மூலம் உங்கள் வாழ்வினை **ஆத்துமீக** வளர்ச்சிக்குரியவாறு **கட்டி எழுப்பி** தேவ **அன்பிலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திலும்** நிரம்பி தேவனைச் **சார்ந்து கொள்ளுங்கள்.** கிடைக்கின்ற நேர மெல்லாம் தேவ வசனங்களை வாசித்து, தியானித்து தேவ பெலன் பெற்று வாழ்ந்திருங்கள். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

அன்பின் தேவபிதாவனவரே! என் வாழ்வின் பெரும்பகுதியை உங்கள் வார்த்தைகளை தவிர்த்தே வாழ்ந்தேன். உலகரீதியிலான என் வாழ்விலே உங்கள் வார்த்தைகளை அற்பமாய் நினைத்து சீர்கேடுகளுக்குள்ளானேன். இன்றுமுதல் வசனத்தின்படி வாழ்ந்து ஆசீர்வாதம் பெற தயைகூருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளுக்குக் கையெடுப்பேன், உமது பிரமாணங்களைத் தியானிப்பேன்." (சங்கீதம் 119:48)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 17
சனி

கர்த்தருக்கு எதிர்கொண்டு
போக ஆயத்தப்படுவோம்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 31-32

**"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்."** (பரி.மத்தேயு 24:44)

வழியும் சத்தியமும் ஜீவனுமாகிய இயேசுகிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! **'நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்...'** என்றுரைத்தவரும், தம் சுயாதினத்தின்படி தனக்கென்று உங்களை பிரித்தெடுத்துக் கொண்டவருமான ஜீவிக்கின்ற தேவனுடைய நாமத்தினால் இன்றும் நன்மைகளுக்கேதுவான நாளே. **"இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம்" (1 கொரிந்தியர் 15:19).**

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படும் தேவபிள்ளைகளே! தேவன் எம்மை இப்புவியில் மனிதர்கள் மத்தியில் உயர்வடைய மாத்திரம் தெரிந்துக்கொள்ளவில்லை. **பரலோக கிரீடத்தை** எமக்கு உரிமையாக அருளும் படியாகவே எம் பாவத்திலிருந்து மீட்டார். நாம் இவ் ஜீவகிரீடத்தை பெறும்படி அனேக பாடுகளையும், சோதனைகளையும், உபத்திரங்களையும் கடந்து **"மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாய்"** காணப்படவேண்டும். **(வெளி: 2:10)** உங்கள் ஆத்மீக காரியங்களை பிறகு, நாளை என பின்போடாதீர்கள். காலதாமதம் செய்வதை முற்றிலும் தவிர்த்துவிடுங்கள். ஏனெனில் இன்றைய பிரதான வசனம் **"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்..."** எனக் கூறுகிறது ஆகவே எந்நேரமும் ஆயத்தமாயிருங்கள்.

தேவ பிள்ளைகளே! **1 யோவான் 2:28, "...அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டு போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்"** என்றுரைக்கிறது. ஆகையால் அழைக்கப்பட்டவர்கள் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை கறைதிரையற்றதாய் பரிசுத்தமாய் காத்துக்கொள்ளவேண்டும். நோவாவின் காலத்தில் மாம்சமான யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். நீங்கள் இப்படி இராதபடி, அழிவுக்கு தப்பித்துக் கொள்ளும்படியாக பரிசுத்தமான, நீதியுடன் கூடிய தேவபயத்துடன் வாழ பிரயாசைப்படுங்கள். நாம் மகிமையின் ராஜாவை தரிசிக்கும் நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பூரண மகிமையுள்ள கிறிஸ்துவுக்கு ஏற்றவர்களாய் விளங்க உங்கள் சுபாவங்கள் குணாதிசயங்கள் மாறட்டும். **தேவதரிசனத்திற்குரிய நாள்!**

ஜெபம்

மகிமையின் தேவனானவரே! உங்கள் வருகையை குறித்து பிரசங்கங்களை கேட்டினாலும், ஆய்வுகளை நடத்தினாலும் அதினால் பலன் இல்லை. உங்கள் நித்திய ஜீவனைக்குறித்து விசுவசித்து ஆவியானவர் மூலம் பரிசுத்தமாய் வாழ்ந்து ஜெயம் பெற என்னை நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்." (பரி.மத்தேயு 24:39)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 18
ஞாயிறு

### இயேசு சுவாமி இல்லாத வாழ்க்கைப்படகு!

வேதவாசிப்பு
யோபு
அதி: 33-34

**"அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது."** (பரி.மத்தேயு 14:24)

அன்புத் தேவபிள்ளைகளே! குழப்பம், கலக்கம், மானீசக போராட்டம், பாடுகள் இவைப் போன்றவைகள் உங்கள் வாழ்வில் எதிர்காற்றாய் வந்தாலும் இவ் "ஜீவமன்னா" சஞ்சிகையின் தேவசெய்திகளுடன் கூடிய **ஜீவ வார்த்தைகள்** உங்களை அன்புடன் அரவணைத்து ஆறுதல் தருகிறது என்பதை நான் உணர்கிறேன். தேவனை அறியாதவர்களின் வாழ்வில் ஏற்படும் இத்தகைய இன்னல்கள் அதிகம், ஆண்டவர் இடைபடாமல் இவர்கள் தம் சுயநலத்தினால் இவைகளைச் சந்தித்து ஏமாற்றத்திற்குள்ளாகி வேதனையுடன் வாழ்கிறார்கள். தேவனுடையவர்களே! நீங்கள் அவரை **இறுகப் பற்றிக்கொள்ளுங்கள்.** ஜீவனுள்ள தேவநாமத்தால் இன்றும் வெற்றிச் சிறந்த வாழ்வையும், ஆத்மாவிலே வளர்ச்சியையும் பெற வாழ்த்துகிறேன்.

பிரியத்திற்குரியவர்களே! **பரி.மத்தேயு 14:22,38** வரை உள்ள வேதவாக்கியங்கள் கூறுவது "இயேசு சுவாமி தம் சீஷர்களை படகில் ஏறி அக்கரைக்குச் செல்ல துரிதப்படுத்தி தனித்து ஜெபிக்க மலைமேல் ஏறினார். **'சீஷர்கள் சென்ற படகு நடுக்கடலில்லே சேர்ந்து எதிர்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது' 'இரவின் நாலாம் ஜாமத்தில் இயேசு கடலின்மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார்'.** இவரைக் கண்டு தானும் கடல்மேல் நடக்க எத்தனித்த பேதுரு பயந்து அமிழ்ந்து போகையில் இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து படகில் ஏறினார். அவர்கள் படகில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது.

அன்பிற்குரியவர்களே! நீங்களும் பெலவீனமாய் இருக்கின்றீர்களா? கர்த்தர் மேல் கொண்ட அன்பின் ஸ்திரமில்லாமல் தடுமாறுகிறீர்களா? குடும்பத்தோரால், சமூகத்தால் கைவிடப்பட்டு தத்தளிக்கிறவாராயிருக்கிறீர்களா? **கலங்காதீர்கள்.** ஆண்டவர் உங்களை நோக்கி கையை நீட்டி பிடித்து படகில் ஏற்ற உங்களருகில் இருக்கிறார்.சாத்தானுடைய செயல்கள் எம்மை சோதனைகளுக்குட்படுத்தி தடுமாற்றமடைய, **பயப்பட** செய்யலாம். காற்றினால் கடலில் அலைகள் எழும்பலாம். ஆண்டவர் மீது கொள்ளும் விசுவாசம், அன்பு, எம்மைக் **காத்து நிலைநிறுத்த** வல்லமையுள்ளது. தேவனை நோக்கி விண்ணப்பம் செய்யுங்கள். சாத்தான் எமக்கு சோதனைகளை கொண்டுவருவான் எம்மை பெலவீனப் படுத்தும் பயப்படுத்தும் காரியங்களை ஏற்படுத்துவான். நீங்கள் வீழ்ந்து எழும்பாமல் கர்த்தரில் உறுதியாய் இருங்கள். தேவன் உங்களை தேடிவந்து **ஆறுதல்** அருள்வார். **ஜெயம் தரும் நாள்**!

ஜெபம்

பரிசுத்த பிதாவே! இயேசு சுவாமி இல்லாத என் வாழ்க்கைப் படகு எதிர்காற்றில் அலைவுபட்ட படகைப்போல் இருக்கிறது. சாத்தானின் சோதனைகள் என்னை தடுமாறச் செய்கிறது. தேவ ஆவியால் என்னை நிரப்பி சமாதானமும், அமைதியும் ஏற்படச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தல் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்." (எபேசியர் 2:22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 19
திங்கள்

# முழு இருதயத்தோடு கர்த்தரை தேடி கண்டடையுங்கள்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 35-36

**"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்."** (எரேமியா 29:13)

அன்பார்ந்த தேவபிள்ளைகளே! ஜீவனோடிருக்கிற பரிசுத்த தேவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன். இன்றும் சகலமும் நலமே. **பரி.யோவான் 4:24** சொல்கிறது **"தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள-வேண்டும்"** என்பதாக ஆகவே கர்த்தரையே உங்கள் கண்கள் தேடட்டும். **உருக்கமான இரக்கங்களினால்** உங்களைத் தேடி வந்தவரை, அவரைத் தேடாத உங்களை தேடிவந்த நேசரை **முழு இருதயத்தோடு** தேடி கண்டுகொள்ளுங்கள்.

தேவபிள்ளைகளே! தேவனை தேடும்படியாக முதலில் உங்கள் **இருதயத்தை பரிசுத்தப்படுத்திக்** கொள்ளுங்கள். தேவ ஆவியானவர் உங்களை வழிநடத்தும்படி உங்களுக்குள் பிரவேசிப்பார். அப்பொழுது ஒவ்வொரு ஜெபவேளையிலும் உங்கள் விழிகளை மூடி தேவனை நோக்கி ஜெபித்து **முழு இருதயத்தோடும்** முழு **ஆத்துமாவோடும்** அவரைத் தேடமுடியும். கண்களை மூடி ஜெபிக்க முடியாத ஆத்மீகர்களும் இருக்கிறார்கள். இதற்கு காரணம் அவர்களது இருதயமும், ஆத்துமாவும் தேவனுடன் ஐக்கியப்படாததேயாகும். அவர்களுக்குள் அப்பா, பிதாவே என அழைக்கும் **புத்திர சுவிகாரம்** காணப்படாது. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.

அன்பு தேவபிள்ளைகளே! ஆண்டவரை முழு உள்ளத்தோடு தேடும்படியாய் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் **அன்புகூர்ந்து** ஆராதித்து ஜெபியுங்கள் தேவபிரசன்னம், சமாதானம், சந்தோஷம் உங்களில்குடிக்கொள்ளும். தேவனை கண்டுபிடிப்பவர்களாய் இருப்பீர்கள். தேவனை தேடும் ஜெபம் ஆராதனை வேதம் வாசிக்கும் வேளைகளில் உங்கள் கைப்பேசிகளை நிறுத்துங்கள். ஜெபத்திற்கு தடைகளை உண்டுபண்ணும் எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்தில் அகன்றுபோகச் செய்யுங்கள். உங்களை முழுவதும் அர்ப்பணியுங்கள். பாவங்களை அறிக்கையிட்டு மனஸ்தாபத்துடன் மன்னிப்பை பெறுங்கள். ஆராதித்து **தேவனோடு ஐக்கியம்** கொள்ளுங்கள். உங்கள் ஆவி ஆத்துமாவிலே **தேவபிரசன்னம்** இறங்கும். உங்கள் வாழ்க்கை மாறும், அவர் பரிசுத்தபாதையில் நடத்துவார். உங்களுடைய ஆத்துமா நித்தியமானது விலையேறப் பெற்றது அவரையே சார்ந்திருந்து அவரில் மகிழ்ந்திருங்கள் அற்புதங்கள் நடக்கும், ஆசீர்வாதம் பெருகும். **தேவதரிசனத்திற்குரிய நாள்!**

ஜெபம்

உலக செல்வங்களை நாடித்தேடி சமாதானம் காண என் இருதய்தை இன்று
உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன். முழு இருதயத்தோடு உங்களை
தேடிக்கண்டடையத் தக்கதாய், என்னை மாற்றி ஜெப ஆவியில் நிரப்புமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்." (சங்கீதம் 119:2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 20
செவ்வாய்

பிதாவின் வாக்குத்தத்தத்தின்
ஆவியைப் பெற
வாஞ்சையுள்ளவர்களாகுங்கள்!

வேதவாசிப்பு
யோபு
அதி: 37-38

**"என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்."** (பரி.லூக்கா 24:49)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! இவ் அதிகாலையில், தேவனுடைய கிருபையை நாடும் உங்களுக்கு ஆத்மீக பெலன் கிட்டவும், பிதா வாக்குப்பண்ணியிருக்கிற பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம், அனுக்கிரகம் பெருகவும் வாழ்த்துகிறேன். **"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ, புதுபெலன் அடைவார்கள்"** என வேதம் கூறுகிறது. **(ஏசாயா 40:31)** நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரம்பும்போது உள்ளான மனுஷனில் தூய ஆவியின் வல்லமை இறங்குகிறது. கர்த்தருக்கென்று பெரிய காரியங்களை செய்யத்தக்கவர்களாய் மாறுதலடைவீர்கள். அவருக்கு சாட்சிகளாய் மாறுவீர்கள். வெளி மனுஷனிலும் பெலனும், ஆசீர்வாதமும், பூரணத்துவமடையும். பாவம் உங்களை மேற்கொள்ளாது, சோதனைகள் அணுகாது.

தேவபிள்ளைகளே! இன்றைய எம் தலைப்பு **'உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'** என இயேசு சுவாமி சொல்லியிருப்பது அவரோடிருந்த சீடர்களுக்கு மாத்திரமல்ல அவரை விசுவசிக்கிற யாவருக்குமேயாகும் **(பரி.யோவான் 14:12)** அவரோடிருந்தவர்கள் அவரது அற்புதகிரியைகளைக் கண்டார்கள். அசுத்த ஆவிகளை அதட்டிவிரட்டுவதையும் அவைகள் பயந்து வெளியேறுவதையும் கண்டனுபவித்தார்கள். ஆயினும் அவர்கள் தேவ இராச்சியத்தின் காரியங்களை பூமியில் செயல்படுத்த உன்னதத்திலிருந்து வரும் தேவ ஆவியானவரின் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை காத்திருந்து செயலாற்றினார்கள்.

அன்புக்குரியவர்களே! இன்றைய நாட்களில் அனேகர் ஆவியானவரின் அபிஷேக வல்லமையை பெறாது, சுயபெலத்தினாலும், அனுபவத்தினாலும், ஊழியங்களை மேற்கொண்டு அனேக இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். ஜெபத்திலும், உபவாசத்திலும் தரித்திருந்து தேவபிதாவின் ஆவியின் அபிஷேக வரங்களோடு, தேவ வசனங்களை ஆரம்பித்து வல்லமையான ஊழியக்காரர்களாய் செயல்படுங்கள். சபைகளை கட்டி எழுப்பி பரலோக இராச்சியத்திற்கு ஆத்தும ஆதாயம் செய்யுங்கள். உங்கள் உள்ளத்தை இயேசுவின் இரத்தத்தால் கழுவி விசுவாசத்தோடும் தாகத்தோடும் வாஞ்சையோடும் கேட்கும் போது நிச்சயமாகவே உங்களை ஆசீர்வதிப்பார். உங்களுடைய பாத்திரம் நிரம்பி வழியும். **உன்னத பெலன் பெறும்நாள்!**

ஜெபம்

அன்பின் பிதாவே உன்னத ஆவியில் நிரம்பாதபடி சுயபெலத்தினால் கருமமாற்றி தோல்வியடைந்தேன். இன்றிலிருந்து தேவ ஆவியை பெற வாஞ்சிக்கிறேன் உபவாசித்து ஜெபித்து பரிசுத்த ஆவியால் தரிப்பிக்கப்படதயை கூறுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...;அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 3:24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 21
புதன்

சுவிஷேசம் உரைக்கும் நற்பணியாளர்களே!

வேதவாசிப்பு
யோபு
அதி: 39-40

**"அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்."** (பரி.லூக்கா 17:10)

தேவனுக்குள் பிரியமானவர்களே! மனோரம்யமான இக்காலைப் பொழுதிலே இன்றும் ஜீவனோடிருக்கிற மகோத்துவமான தேவனுடைய பரிசுத்த நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுதுகொள்ளுங்கள். **(சங்கீதம் 29:2)** அவரிடத்திலிருந்து நன்மையான ஈவுகளை எதிர்பார்த்து, பெற்றுக்கொள்ளுங்கள். எம் மீட்பருக்கு நன்றி ஆராதனை செய்து கௌரவித்து கனப்படுத்தினால் மாத்திரம் போதாது நாம் பெற்ற மீட்பு, சமாதானம், சந்தோஷம், பாவ இருளில் வாழும் மானிடர்களும் பெறும்படியாக சுவிஷேசம் அறிவிக்கும் ஆத்மபாரம் கொண்ட சுவிஷேசகராய் மாறவேண்டும். இது சுய பெலத்தால் ஆகாத காரியம் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெறவேண்டும்.

தேவபிள்ளைகளே! **'எங்கள் சுவிஷேசம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும் முழுநிச்சயத்தோடும் வந்தது'** என **1தெச: 1:5** கூறுகிறது. நீங்கள் கேட்ட சுவிஷேசம் உங்களை சதாகால ஜீவனுக்குரிய பரலோக வாசியாய் மாற்றியுள்ளது. எம் தாயகத்தில் சத்துருவானவனால் சரீரத்தில் வியாதிகள் என்னும் பாடுகளுக்குட்பட்டு நொந்துபோய், சிறுமையடைந்து அழிவை நோக்கி அள்ளுண்டு போகும் ஆத்துமாக்களைக் குறித்து மகாவேதனை, மனப்பாரம் உண்டாகவேண்டும். அவர்களுக்காய் கண்ணீர் விட்டு கதறி அழுந்து ஜெபிக்கவேண்டும். நற்செய்தி அறிவிக்க பிரயாசைப்படவேண்டும்.

தேவபிள்ளைகளே! உங்கள் சுவிஷேசப் பணியின் மூலம் அனேக புது ஆத்துமாக்களை தேவனண்டையில் சேர்த்தீர்களா? விடுதலை ஆராதனையில் அவர்கள் ஆசீர்வாதங்களை பெற்றார்களா? இதைக்குறித்து நீங்கள் மேன்மை பாராட்டாதீர்கள். பெருமிதமடையாதீர்கள். ஏனெனில் ஆத்துமாக்கள் தேவனுடையது. நாங்கள் அவர் பாவிக்கும் கருவிகள் மாத்திரமே. இதையே இன்றைய எம் பிரதான வசனம் எமக்கு கற்றுக்கொடுக்கிறது. இதை பலமுறை வாசித்து தியானியுங்கள். தேவபணியை தாழ்மையுடனும் கீழ்ப்படிவுடனும் செய்யுங்கள். எம் கடமையை செய்யும்போது அது பரலோகத்தில் அதிக பலனைத் தரும். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

பரிசுத்த பிதாவே! நான் உங்கள் நற்செய்தியை பெற்று, உங்களையறிந்து ஏற்றுக்கொண்டு நித்திய ஜீவனுக்குரிய வழியில் நடக்கிறேன். ஆனால் அழியும் ஆத்துமாக்களை குறித்து அக்கறையற்றிருந்தேன். என்னை மன்னித்து சுவிஷேசம் அறிவிக்க, ஆத்மபாரத்துடன் ஜெபிக்க என்னை பயன்படுத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று." (2 தீமொத்தேயு 4:5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 22
வியாழன்

# நீங்களும் தாலந்து உடையவரா?

வேதவாசிப்பு
யோபு
அதி: 41–42

**"அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்."** (பரி.மத்தேயு 25:15)

தேவனுக்குள் பிரியமானவர்களே! உங்களில் வாசம்பண்ணும் உன்னத தேவ ஆவியானவரின் நிமித்தம் இப்புவியின் மனிதர்கள் மத்தியில் பெரிய காரியங்களை செய்யமுடியும். இயேசுவை தம் **இரட்சகராய்** ஏற்றுக்கொண்ட யாவருக்கும் ஆவியானவரின் கொடைகளை அருள கர்த்தர் பிரியமுள்ளவராயிருக்கிறார். இன்றைய எம் வசனத்தின்படி திறமைக்குத் தக்கதாக ஆண்டவர் எமக்கு **ஆவியின் வரங்களை** தருகிறார். அவற்றை பெருகப் பண்ண வேண்டியது எம் கடமையாகும். அப்படி செய்யாவிடில் அவற்றை மறுபடியும் அவரெடுத்துக் கொள்வார். ஆகையால் தேவ ஆவியானவர் அளித்த அருட்கொடைகளை பெருகச் செய்யும் **சவால்களை ஜெயங்கொள்ளும்** நாளாய் அமைய இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தினால் வாழ்த்துகிறேன்.

தேவனுடையவர்களே! தேவ இராச்சியத்தின் நிமித்தம் உங்களுக்கு கிடைத்த பணி சிறிதானதோ, பெரிதானதோ முழு பெலத்துடன் தாலந்துகளின் உதவியுடன் செய்வது அவசியம். தேவவிருப்பமும் அதுவே. **கொலோசியர் 3:24** சொல்கிறது **"எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்"** என்பதாக. ஆகையால் என்ன கஷ்டமானாலும் உங்கள் ஊழியத்தை பயமின்றி நிறைவேற்றுங்கள். இலக்கை நோக்கி ஓடுங்கள்.

அன்புடையோரே! 1984ம் ஆண்டிலிருந்து 1999ம் ஆண்டு வரை நான் என் ஆத்மீக தகப்பனின் உதவி ஊழியக்காரணமாய் பணிபுரிந்தேன். அந்நாட்களில் தற்கொலை செய்துகொள்ளும் சூழ்நிலையைக்கூட சந்தித்துள்ளேன். ஆயினும் எனக்குக் கிடைத்த காலங்களை பிரயோசனப்படுத்தி, தேவனளித்த **தாலந்துகளை** உபயோகித்து தேவனளித்த ஊழியத்தை பெருக்கிக் கொண்டேன். அதனால் இன்று எம் தேசத்திலும், வெளித்தேசங்களிலும் **பிரபலதேவதாசனாய் பிரசித்தி** பெற்றுள்ளேன். நீங்களும் சாத்தானுடைய சவால்களை ஜெயித்து உங்களுக்கு கிடைத்த **தாலந்துகளை அதிகரிக்கச் செய்து** ஆசீர்வாதங்களைப் பெறுங்கள். நீங்களும் விஷேசித்தவராய் மாறும்படி, ஆவியின் வரங்களைப் பெற்று **கிறிஸ்துவின் சுபாவங்களால்** நிறைந்தவர்களாய் இருங்கள். **வெற்றியின் நாள்!**

**ஜெபம்**

அன்பின் பிதாவானவரே எனக்கேற்பட்ட பாடுகள்! வேதனைகள் நிமித்தம் ஊழியத்தை கைவிட்டு போக எண்ணினேன். இவைகள் சாத்தான் என்னை பயமுறுத்த செய்த காரியமென உணர்ந்தேன். என் தாலந்துகளை பாவித்து என் ஊயழித்தை வல்லமையாக செய்ய உதவியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்." (பரி.மத்தேயு 25:29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 23
வெள்ளி

கர்த்தர்
எனக்கு சகாயர்
என்று உரைக்கும்
தாவீது இராஜா!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 01-02

**"...;என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது;..."** (சங்கீதம் 28:7)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் இப்புதிய தினத்தில் உங்களை வாழ்த்தி வரவேற்கின்றேன். இன்றைய இத்தேவ செய்தியின் மூலம் **தேவ அனுக்கிரகமும், அவரது ஒத்தாசையும்** கடந்து வருவதாக. உங்கள் சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் நீங்கள் அவைகளை மேற்கொள்ள **கர்த்தர் சகாயம் செய்வாராக. சங்கீதம் 38:22**ல் தாவீது **என் இரட்சிப்பாகிய ஆண்டவரே எனக்கு சகாயம் செய்யத் தீவிரியும்** என தேவனை அழைக்கிறார். **கர்த்தரே எம் சகாயர்.** நாம் அவரையே **நம்பியிருந்தால்** அவரது **சகாயம்** எமக்கு கிட்டும். எம் இருதயம் களிகூறும். **சகாயர் என்றால்** உதவி செய்கிறவர் என அர்த்தம்.

தேவசகாயம் பெறும் தேவபிள்ளைகளே! **எம் வாழ்க்கை** எமக்கு சொந்தமானதல்ல, மனித வாழ்க்கை **தேவ பிதாவிற்குரியது.** எமக்கேற்படும் கலக்கம், பிரச்சினைகள், மனமடிவுகள், வெறுமை, வெறுப்புகள் போன்றவற்றிற்கு காரணம் எம் சுயசித்தமும், தீர்மானங்களுமே. **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.** மனிதர்களுக்கு பயப்படும் பயம், பணப் பலம், அதிகார பலம், செல்வாக்கு, கடன் போன்றவைகளை சந்திக்கும் வேளையில் விசுவாசத்துடன் அவர் **சகாயத்தை** நாடுங்கள். **கர்த்தர்** எனக்கு **சகாயராக** இருக்கிறப்படியினால் நான் **பயப்பட மாட்டேன்** எனக் கூறுங்கள்.

தேவனுடையவர்களே! இப்பொழுதே உங்கள் உள்ளத்தை, செயல்களை தேவன் கரம் அர்பணியுங்கள். அவரே உங்கள் சகாயர் என முழு உள்ளத்தோடும் விசுவாசியுங்கள். **"நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்" (சங்கீதம் 23:4)** என அறிக்கையிடுங்கள். கர்த்தர் உங்களுக்கு சகாயம் செய்வார். அவரது சகாயம் **"என் இருதயம் அவரை நம்பியிருக்கிறது, நான் சகாயம் பெற்றேன். ஆகையால் என் இருதயம் களிகூறுகிறது"** என்று சொல்லச் செய்யும். கர்த்தரிடமே தாவீது இராஜா சகாயத்தைத் தேடி தன் வாழ்வில் புலம்பலை ஆனந்தக் களிப்பாய் மாற்றிக் கொள்கிறார். அவர் உங்களுக்கு **சகாயம்** புரிவாரேயாகில் அதை **நிறுத்த யாராலும்** முடியாது. அது **மனிதனது சகாயம் போன்றதல்ல.** அது **சம்பூரணமானதாகும்.** இக்கட்டான வேளையில் இயேசு கிறிஸ்துவிடமிருந்து உதவி வரும், அவரே எம் **சகாயர், அடைக்கலம், பெலன், அனுகூலமான துணையுமானவர். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

பிதாவே! நீங்கள் எனக்கு சகாயராய் இருக்கிறப்படியால் உங்களைத் துதிக்கிறேன். எனக்கேற்பட்டுள்ள பிரச்சினைகள், உபத்திரவங்கள், சவால்கள் யாவற்றிலும் நீர் எனக்கு சகாயராய் இருந்து எனக்கு தைரியத்தையும், விடுதலையையும் தந்து உம்மில் களிகூறச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

இன்றைய வாக்குத்தத்தம்

"இதோ, தேவன் எனக்குச் சகாயர்; ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார்." (சங்கீதம் 54:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 24
சனி

எம்மை மறாவா
இயேசு தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 03-04

**"...;நான் உன்னை உருவாக்கினேன்; நீ என் தாசன்; இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை."** (ஏசாயா 44:21)

அன்பார்ந்த தேவபிள்ளைகளே! கர்த்தருடைய அளவில்லாகிருபை பொழிந்துக்கொண்டிருக்கும் இப்புதிய உதயலில வாக்களிப்பவரும், அதை நிறைவேற்றுவருமாகிய வாக்குத்தத்தங்களின் தேவனானவர் இன்றும் ஜீவனுள்ளவராய் உங்களோடு உடன்படிக்கை செய்கிறார். **"...நான் உன்னை உருவாக்கினேன். நீ என் தாசன் இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை..."** என்பதாக எம்மை உருவாக்கினவர். எம்மை தெரிந்துகொண்டவர். உள்ளங்கையில் வரைந்திருக்கிறார். உங்களை மேன்மைப்படுத்த, உயர்த்தி, ஆசீர்வதிக்க இன்றும் அவர் உங்களை நோக்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய அன்பு ஆச்சரியமானது.

அன்பிற்குரியவர்களே! எம்மை அழைத்தவர் எம்மை மறந்துபோகும்படியான சந்தர்ப்பங்கள் எவ்வளவோ உண்டு. எம் பாவங்கள், இடறிப்போகும் வேளைகள், தூரமாகி மறுதலிக்கும் நேரங்கள். இப்படியான அனேக காரியங்களினால் அவரால் எம்மை மறந்துவிடமுடியும். ஆனால் எம்மை மறவால் இருக்க தம் உள்ளங்கைகளில் எம்மை வரைந்திருக்கிறார். **'நீ என்னால் மறக்கப்படுவதில்லை'** என அவர் உரைப்பதால் அவர் எப்பொழுதும் எம்மையே நினைத்திருக்கிறார் என்பதை அறியலாம். பிரச்சினைகள், போராட்டங்கள், துன்பங்கள், எம்மை வாட்டும் போது ஆண்டவர் எம்மை மறந்துவிட்டாரோ என எண்ணுகிறோம். இது தவறாகும்.

தேவபிள்ளைகளே! **'உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களை கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன். என்னிடத்தில் திரும்பு உன்னை நான் மீட்டுக்கொண்டேன்'** என **ஏசாயா 44:22** கூறும் கர்த்தர் அன்போடு உங்களை அழைக்கிறார். நிந்தனைகளா? போராட்டங்களா? வியாதி வறுமையா? அடிமைத்தனத்திலிருந்து தவிப்பா? உங்களை ஆண்டவர் நினைத்தருளியிருக்கிறார். விடுதலையளித்து ஆசீர்வதிப்பார். பெற்ற தாய் கூட நம்மை மறந்துபோகலாம். இயேசு கிறிஸ்துவோ எம்மை மறக்கவேமாட்டார். நம்மையே நினைத்துக்கொண்டிருக்கிற ஓர் அற்புத அன்பு தேவன் நமக்கிருக்கிறார் என்பதும் நான் தேவனுடைய பிள்ளை, உன்தை தேவனுடைய சுதந்திரம் என மகிழ்ச்சியோடு சொல்வதும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நிரப்பப்படுவதும். எத்தனை பெரிய பாக்கியம். **தேவ அனுக்கிரகமான நாள்!**

ஜெபம்

என் அன்பின் தேவனே ஒருபோதும் எம்மை மறவாதவராய், எம்மைக் காண்கிறவரான எம்மை உருவாக்கின தேவனே, நான் உங்களை மறந்து செயல்பட்ட வேளைகளையெல்லாம் மன்னித்து உங்கள் பாசக்கரத்தால் என்னை மன்னிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை." (ஏசாயா 49:15)

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 25
ஞாயிறு

## தேவ கிருபை என்றுமுள்ளது!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 05-06

"...;கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது;..." (சங்கீதம் 138:8)

தேவனுடைய கண்களிலே கிருபை கிடைக்கப் பெற்றவர்களான தேவபிள்ளைகளே! கர்த்தருடைய **கிருபை என்றுமுள்ளது** மாத்திரமல்ல, காலைதோறும் புதிதானதாக இருக்கிறது. அவரது **கிருபையின் ஆசீர்வாதங்கள்** எண்ணற்றவை. எங்களைத் தொடரும் அவரது கிருபை எமக்கு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும், அவர் எம்மோடிருக்கிறார் என்கிற உணர்வையும் தருகிறது. இப்புதிய உதயலிலும் ஜீவனுள்ள தேவன் ஜெயக்கிறிஸ்து தடைகளை நீக்கி காரியங்களை வாய்க்கப்பண்ணுகிறவராய், **கோணலானவைகளை செம்மையாக்குகிறவராய்** உங்களோடு வருவாராக. என இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

தேவபிள்ளைகளே! **புலம்பல் 3:22 "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை"** என்றுரைக்கிறது. ஆகையால் தேவகிருபைக்குரியவர்கள் பாக்கியவான்கள். கர்த்தருடைய இயற்கையின் படைப்பிலே தாமரை இலை ஓர் விஷேசித்த தன்மையுடையது. அது நீரில் இருந்தாலும் அது நீரை உறிஞ்சாது. அதன் மீது விழும் நீர் வழிந்தோடிவிடும். இதனால் அது நீரினால் அழுகி அழியாது. நெடு நாட்கள் நீடித்திருக்கிறது. அதுபோல நீங்களும் கர்த்தருடைய என்றுமுள்ள **கிருபையை** பெறுவீர்களேயானால் சாத்தான் கொண்டுவரும் பாவம், இச்சை, சோதனைகளில் உங்கள் ஆத்மீக ஜீவியம் நிர்முலமாகாது, இருதயம் கலங்காதிப்பதாக.

**கிருபை பெற்றவர்களே**! அவரது என்றுமுள்ள கிருபையை பெற விரும்புகிறவர்கள் அவரை உண்மையுள்ள இருதயத்தோடு நேசித்து, பரிசுத்தமுள்ள தேவ பிள்ளைகளாய் வாழவேண்டும். யோபு கூறுவதுபோல் **"எனக்கு ஜீவனை தந்ததுமல்லாமல் தயவையும் பாராட்டினீர்" (யோபு 10:12)** என நன்றி பலி ஏறெடுங்கள். துன்புறும் ஜனங்களுக்காக நித்திய அக்கினியை நோக்கி பயணிக்கும் ஜனங்களுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைக்க அழுது ஜெபியுங்கள். அப்பொழுது என்றுமுள்ள கர்த்தருடைய கிருபை உங்களை சூழும். ஆசீர்வாதமடைவீர்கள். நீங்கள் கர்த்தருடையவர்களானபடியால் அவர் சமூகத்தில் காத்திருக்கும் போது **கிருபையின் அபிஷேகம் கிருபையின் ஆவியையும்** பெறுவீர்கள். கர்த்தர் எதிர்பார்க்கும் தாழ்மையுள்ள இருதயமுடையவர்களாயிருந்து கிருபையில் வளருங்கள். அதிகாலையில் **தேவனுடைய கிருபையை** நாடுவீர்களாக. அவரது **கிருபையை** எண்ணி துதித்து மகிழுங்கள். **கிருபையின் நாள்**!

ஜெபம்

கிருபை நிறைந்தவரே! நான் சிறுமைப்பட்டுபோயிருப்பது உங்கள் என்றுமுள்ள கிருபை என்னை விட்டு தூரமான படியாலே உங்கள் கிருபையை மறுபடியும் பெற அதிகாலை உங்கள் சந்நிதியில் வந்து நிற்பேன். ஆத்மபாரத்தோடு ஜெபித்து உங்கள் என்றென்றுமுள்ள கிருபையை பெற உதவுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

இன்றைய வாக்குத்தத்தம்

"என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்; என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்." (சங்கீதம் 89:28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 07-08

**"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."** (சங்கீதம் 34:8)

அன்பார்ந்த தேவபிள்ளைகளே! **நல்லவரும் வல்லவருமான** ஜீவனுள்ள தேவனின் கிருபை உங்களைச் சூழ்ந்துக் கொண்டிருக்கும் இக்காலைப் பொழுதிலே **நித்திய பேரின்பத்தை அடையும்படியாக பரிசுத்தத்தோடும், தெய்வீக அன்போடும், மனத் தாழ்மையோடும், ஜெபத்தோடும்** ஆயத்தமாகுமாறு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். பலவிதமான **ருசிகளை** அறியும்படி எம் **நாவை** உருவாக்கின கர்த்தர் **அவர் நல்லவர்** என்பதை நாம் எம் **ஆவியிலும், ஆத்துமாவிலும் ருசித்தறியும்படி தேவ வார்த்தைகளையும், உணர்வுள்ள தேவ ஆவியையும்** எமக்களித்துள்ளார்.

தேவபிள்ளைகளே! அலங்கரிக்கபட்ட அனேக விதமான தின்பண்டங்களோடு நாம் ஓர் மேசையைப் பார்த்து அல்லது உணவுப்பதார்த்தங்களின் சேர்வைகள் செயல்முறைகள் கேட்டு **ருசியை உணரவோ, சுவையை அறியவோ** முடியாது. அதை வாயில் போட்டு சாப்பிட்டுப் பார்த்தால் மட்டுமே அதன் **சுவை** என்ன, எப்படிப்பட்டது என அறியமுடியும். அதின் **போஷாக்குகளையும்** பெற முடியும். அவ்வண்ணமாக நாம் **வேதத்தை தியானித்து, தேவனுடைய குணாதிசயங்களை அறிந்து** அவரை **நேசித்து சமீபமாகும்போதும்** அவரையே **நம்பும்போதும்** அவர் நல்லவர் என்பதை **ருசித்துப்பார்க்கலாம்.**

அன்புடையோரே! **"என் உள்ளம் குழம்பி அலைகிறது, என் பெலன் என்னை விட்டு விலகி என் கண்களில் ஒளி முதலாய் இல்லாமற் போயிற்று"** என சங்கீதக்காரன் **38:10**ல் சொல்லுவதுபோல உங்கள் இருதயம் புலம்புகிறதா? உங்கள் வாழ்வில் காணும் **சம்பிரதாய மதஅனுஷ்டானங்களை** உதறித்தள்ளி, **பாவத்தின் சந்தோஷங்களை** வெறுத்து **கர்த்தருடன் ஐக்கியம்** கொண்டு, **தூய ஆவியானவருக்கு முதலிடம்** அளித்து அவரை **நம்பிக்கையுடன் இறுகப்பற்றிக்கொள்ளுங்கள்.** அவரைப்போல மனதுருக்கமும், கிருபையும், அன்பின் பூரணத்துவமும் உள்ள தெய்வம் வேறே இல்லை. இன்றைய எம் தலைப்பு வசனத்தின்படி **"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள், அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்"** நீங்களும் அச்சலாக்கியத்தைப் பெறுங்கள். அவரது அன்பு மாறாது, நம்பிக்கை வீண்போகாது, நன்மைகள் என்றும் குறையாது. **நன்மைகளின் நாள்!**

**ஜெபம்**

பிதாவானவரே, எம்மைப் பாவத்திலிருந்து மீட்கும்படியாக உங்கள் திருக்குமாரன் இயேசுவையே சிலுவையில் பலியாக தந்தவரே, உங்களைப்போல நல்ல தெய்வம் இப்பாரினில் இல்லை. உங்களை நம்பி, நீங்கள் நல்லவர் என அறிந்து, உங்களையே நம்பிக்கையாய் கொண்டுவாழ கிருபையருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.
~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...;என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 31:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 27
செவ்வாய்

எம் இரட்சிப்பின்
தேவன் இயேசுகிறிஸ்து!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 09-10

**"உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்."** (சங்கீதம் 25:5)

பிரியமானவர்களே! **எமக்குப் போதித்து சத்தியத்திலே வழிநடத்தும்** ஜீவனோடிருக்கிற தேவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவருடைய அதிசயமான **வழிநடத்துதலையும்,** அவரது **போதனைகள்** மூலம் நீதியின் மார்க்கங்களையும் பெற்று சுகபெலத்துடன் வாழ வாழ்த்துகிறேன். தாவீது ராஜா மேலே கொடுக்கப்பட்ட சத்திய வசனத்திலே கூறுகிறார் **"நீரே என் இரட்சிப்பின் தேவன் உம்மை நோக்கி நாள்முழுவதும் காத்திருக்கிறேன்"** என்பதாக. அவரை நோக்கி காத்திருப்பதன் மூலம் வெற்றியின் ஆரம்பப்படியில் கால்வையுங்கள்.

**சத்திய தேவனின் பிள்ளைகளே!** நீங்கள் இவ்வுலக காரியங்கள் எவைகளில் **விடுதலை, இரட்சிப்பு** பெற்றுக்கொண்டப் போதிலும் உங்கள் **உள்ளான மனுஷன் பழையவனாகவே** பாவத்திலே வாழ்வானாகில் எவ்வித **பலனுமில்லை.** சிலவேளையில் ஞாயிறு **தேவ ஆராதனை** மிக அலங்காரமானதாய் இருந்து நீங்கள் மிகத் தீவிரமாக ஓடியோடி **ஊழியத்தை மிக நேர்த்தியாக** செய்திருக்கலாம். ஆனால் இவைகள் யாவும் ஓர் **இயந்திரத்தின்** இயக்கம் போலிருக்கிறது என எண்ணுவீர்களேயானால் மிகப் **பயங்கரமான** நிலையாகும். நீங்கள் எந்தச் சபையை சார்ந்தவராயினும், எந்த ஸ்தாபனத்தில் தொழில் புரிந்தாலும் இயேசு கிறிஸ்துவின் **ஆவியானவர் உங்களை ஆளுகை செய்ய வேண்டும்,** அப்படியல்லாதவிடத்து உங்கள் உள்ளம் அலைபாயும். ஆகையால் **கலங்காதிருங்கள்** உங்கள் **உள்ளத்தை தேவனின் ஆளுகைக்குட்படுத்துங்கள்.**

தேவபிள்ளைகளே! இன்றைய எம் தலைப்பு வேத வசனம் **"உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி என்னைப் போதித்தருளும்"** எனவும் கூறுகிறது. ஆவியானவரின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொள்ளுங்கள். அவர் அனுதினமும் **போதித்து சத்தியத்தில்** வழிநடத்துவார். இன்னுமாக நீங்கள் இயேசுகிறிஸ்துவின் புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்று **(பரி.யோவான் 1:12)** நித்திய ஜீவனுக்கு உரிமையாளர்கள் என எண்ணுங்கள். உங்களுக்கு தேவன் அருளிய **இரட்சிப்பினால்** கிடைத்த **புத்திரசுவிகாரத்தையும் நித்திய ஜீவனைக்** குறித்தும் சிந்தியுங்கள். அதைக் காத்துக்கொள்ள பிரயாசப்படுங்கள். **சுவிசேஷத்தை சகலருக்கும் அறிவியுங்கள். ஜெயம் தரும் நாள!**

ஜெபம்

என் மீட்பர் இயேசு கிறிஸ்துவே எனக்களித்த இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும் நன்றி. உங்கள் புத்திரசுவிகார ஆவியினால் சகல சவால்களிலும் ஜெயம் பெறுவேன். என் இரட்சகராகிய உங்களையே நோக்கி காத்திருப்பேன். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும்." (சங்கீதம் 62:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

2018

நவம்பர் 28

புதன்

நிந்தைகளுக்கு அஞ்சாதிருங்கள்!

வேதவாசிப்பு

சங்கீதம்

அதி: 11–12

**"...;அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத் தொடங்கினார்கள்."** (பரி.மத்தேயு 12:2)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இவ்வேளையில் நீங்கள் கரமேந்தி வாசித்துக்கொண்டிருப்பது உங்கள் **இருதயத்தின் வேதனைகளை** நன்கறிந்து **உணர்வுகளை** நன்றாய் புரிந்துக்கொள்ளக்கூடிய உங்கள் உள்ளார்ந்த மனிதனைப் பெலப்படுத்தக்கூடிய தேவனுடைய சத்திய வார்த்தைகளுடன் கூடிய **'ஜீவ மன்னா'** தினச் செய்தியாகும். **ஆகையால் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.** ஏனெனில் வயிற்றிற்கு ஆகாரமும், சரீரத்திற்கு ஆடைகளையும், தலைக்கு நிழலுமின்றி வாழும் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் எம்மை தம் **சொந்த ஜனமாகத்** தெரிந்துக் கொண்ட தேவ பிதாவை ஸ்தோத்தரிப்போம். இன்றும் **இயேசுவின் நாமத்தில்** ஜெயம் பெறுமாறு வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

தேவ பிள்ளைகளே! **ஓய்வு நாள் அது கர்த்தருக்கு பரிசுத்தமானது. ஓய்வு நாளில் வேலை செய்கிறவன் எவனும் கொலைசெய்யப்பட வேண்டும்** என **யாத்திராகமம் 31:15** உரைக்கிறது. இன்றைய எம் பிரதான வேதவாக்கியம் இயேசு கிறிஸ்து ஓய்வு நாளில் பயிர்வழியே போனார். அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து கதிர்களை கொய்து தின்னத் தொடங்கினார்கள் என்றுரைக்கிறது. பரி மத்தேயுவில் மேலும் கூப்படுகிறது, பரிசேயர் அதைக் கண்டு அவரை நோக்கி இதோ **ஓய்வு நாளில் செய்யத் தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே** என எப்பொழுதும் அவர்களது குறைகளை தேடும் பரிசேயர் கூறுகிறார்கள்.

அன்புடையோரே! எவ்வளவு **நன்மையான ஊழியத்தை** நாம் மேற்கொண்டாலும் **சரீரபிரகாரமான** மனிதர்களை சத்துருவானவன் பாவித்து குறைகளைக் காணச் செய்வான். **ஆயினும் வியாதிகளிலும் பாடுகளிலும், மானசீக போராட்டங்களிலும்** சிக்கி தவிக்கும், சிறுமைப்பட்டு போயிருக்கும் ஜனங்களை விடுவித்து ஆறுதலைப் பெற்றுத்தர இயேசு கிறிஸ்துவின் ஊழியர்களால் அவரது வல்லமைக்கூடாய் செயல்புரிய முடியும். ஆகையால் பரிசேயர்களுடைய குற்றச் சாட்டை நிராகரித்து பிதாவின் சித்தத்தை செய்து முடித்த நம் ஆண்டவரைப்போல **நிந்தைகளுக்குப் பயப்படாது தேவ அன்பிலேயும், ஜெபத்திலும்** யாவற்றையும் **சகித்து** முன் நோக்கிச் செல்வோம். **கிறிஸ்துவுக்குள் வெற்றி பெறும் நாள்!**

ஜெபம்

நான் உண்மையும் உத்தமுமாய் செய்யும் ஊழியத்திலே சாத்தான் உண்டுபண்ணும் போரட்டங்கள், நிந்தைகள் அனேகம். ஆயினும் அவைகளில் ஜெயம் பெறத் தக்கதாய் நீங்கள் என்னை வழிநடத்துவது உறுதி. என்னைக் குறித்து விமர்சித்து குறை கூறுபவர்களை மன்னித்து அன்பு கூறுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்." (1 பேதுரு 3:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 29
வியாழன்

# மாம்சத்தின் கிரியைகளை வெறுத்து விடுங்கள்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 13–14

**"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது;..."** (கலாத்தியர் 5:17)

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே! பிதாவாகிய தேவன் பரிசுத்தராயிருக்கிறார். அவரது பிள்ளைகளாகிய எமக்கும் பரிசுத்தத்தைக் கட்டளையிட்டிருக்கிறார். **பரிசுத்த ஆவியானவர் நமக்கு பரிசுத்த பாதைக் காட்டுகிறவர்.** வேதத்தின் மூலம் **கர்த்தர் எம்மை பரிசுத்தப்படுத்துகிறார்.** அதுபோல சத்துருவானவன் தமது மாம்ச கிரியைகளை உண்டுபண்ணி அசுத்தத்திற்குள் வழிநடத்த எத்தனிக்கின்றான். ஆகையால் இன்றும் இயேசு கிறிஸ்து என்னும் வல்லமையுள்ள பரிசுத்த நாமத்தினால் **தூய ஆவியானவரால் வழிநடத்தப்படும்படியாக** ஜெபிக்கிறேன்.

தேவனுக்குந்தவர்களே! எம்மில் வெளிப்படும் செயல்கள் இரண்டு வகையாகும். ஒன்று **அன்பின் கிரியை,** மற்றது **மாம்சத்தின் கிரியை** இது ஒன்றுக்கொன்று விரோதமாய் செயல்படுகிறது. மாம்சத்தின் கிரியைகளில் சாத்தான் கொண்டு வரும் **சோதனைகளுக்கு** இடமளிப்பதால் **மாம்சத்தின் கிரியைகளில்** நம்மை அறியாமலேயே இடமளித்து, முதலிடம் கொடுத்து **தேவனோடு கொண்ட ஐக்கியத்தை** இழந்து போகிறோம். இதையே இன்றைய எம் பிரதான வேத வசனம் கூறுகிறது **"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது"** என்பதாக.

தேவனுடையவர்களே! **கர்த்தரையே சார்ந்துக் கொள்ளுங்கள். கறைத்திரை** ஒன்றுமில்லாமல் உங்களை **சுத்திகரித்துக்கொள்ளுங்கள்.** ஆவியானவர் வழிநடத்த இடமளியுங்கள். **மாம்சத்தின் கிரியைகளை** அழிக்கும்படியாய் **உபவாசத்திலும், ஜெபத்திலும்** தரித்திருங்கள். ஆவியானவர் எம் **பலவீனங்களில்** உதவிசெய்ய நம்மோடிருக்கிறார். கிறிஸ்துவின் மேலும், ஆவியானவர் மேலும் நம்பிக்கைக் கொண்டு பெலப்படுங்கள். நித்தியமான எம் **ஆத்துமாவைக்** குறித்து அக்கறையுடன் செயல்படுங்கள். நாம் பரலோகத்திற்குரியவர்கள். தேவ பிரசன்னத்தில் மகிழ்ந்திருக்க வேண்டியவர்கள். மாம்சமானது அழிந்து போகும், **ஆத்துமா நித்திய மகிழ்ச்சிக்குள்** பரலோகத்திற்கு கடந்து போகும்படி **பரிசுத்தத்தில் நிலைத்திருங்கள்.** ஆவியானவருடைய அக்கினி உங்களில் இறங்கிவரும் போது உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் சுத்தமாகும் கர்த்தருக்கு பிரிய மில்லாத பாவ சுபாவங்கள் விலகும் விடுதலையும் சமாதானமும். உண்டாகும். **ஜெயம் பெறும் நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! உங்கள் உன்னத அன்பில் ஐக்கியம் கொள்ள முடியாதபடி சத்துருவானவன் என்னில் மாம்சக் கிரியைகளை கொண்டு வந்து என்னை விழத்தள்ள செய்யும் முயற்சிகளிலிருந்து நான் ஜெயங்கொள்ளும்படியாக உங்கள் ஆவியின் பெலத்தை எனக்கருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்." (ரோமர் 8:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
2018
நவம்பர் 30
வெள்ளி

# கர்த்தரின் தற்காலிகமான கோபம்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 15-16

**"...நான் உங்கள்மேல் என் கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை; நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்."** (எரேமியா 3:12)

கர்த்தருடைய கண்களிலே கிருபை கிடைக்கப்பெற்றவர்களே! **கர்த்தர் உங்களோடு வருகிறார்** என்கிற உணர்வு கொண்டவர்களாய் இருங்கள். **தைரியத்தை, தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும்** இது ஏற்படுத்தும் இன்றும் அவரது **கிருபை** உங்களோடு கூட கடந்து வருகிறது. இம்மாத இறுதி நாளின் ஆரம்பதியிலே தேவாதி தேவனை **ஸ்தோத்திரம்** செய்யுங்கள். அவர் சகலவற்றை **நம்நன்மைக்கேதுவாய் செய்திருக்கிறார்.**

தேவபிள்ளைகளே! சில வேளைகளில் சில தேவபிள்ளைகள் முதலாவது தமக்கேற்படும் பாடுகள், இழப்புகள், வேதனை துன்பங்கள் போன்ற வேளைகளில் **(யோபு 21:15) "சர்வ வல்லவரை நாம் சேவிக்க அவர் யார்? அவரை நோக்கி ஜெபம் பண்ணுவதினால் நமக்கு பிரயோஜனம் என்ன?"** என்பதைப் போன்ற வார்த்தைகளை கூறுகிறவர்களாய் இருக்கிறார்கள். உங்கள் நாவுகளினால் இப்படியான **வார்த்தைகளை கூறாதிருங்கள்.** ஏனெனில் உங்கள் வாயின் வார்த்தைகளை பாவித்து உங்கள் மீது தனது **அக்கினி அஸ்திரங்களை** பிரயோகிக்க சாத்தான் செயல் புரிவான்.

தேவனுடையவர்களே! உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் உபத்திரவங்களுக்கு காரணம் என்ன என்பதை முதலில் சிந்தியுங்கள். தேவனுக்கு விரோதமான செயல்களால் அவரை **நோகச் செய்தீர்களா? கோபப்படுத்தினீர்களா?** ஊழியங்களை **நிராதரித்து** போனீர்களா? இப்படியான காரியங்கள் **தேவ கிருபையை** உங்களை விட்டு **தூரமாக்கி**யிருக்கலாம். ஆகவே **மனஸ்தாபத்தோட** ஜீவனோடிருக்கும் வல்லமையுள்ள தேவனிடம் திரும்புங்கள். இன்றைய பிரதான வசனத்தின் பிரகாரம் **அவர் கிருமையுள்ளவரென்றும், கோபம் வைக்காதவர்** என்பதை ஏற்று அவரது **சதாகால அன்பிற்கு** பாத்திரவாளியாகுங்கள். அவர் தடைகளை நீங்கி **தேவகிருபை** பொழிந்தருளுவார். வெற்றியின் பாதையில் நடத்துவார். தெய்வீக சமாதானம் உங்கள் இருதயத்தை நிரப்புவதாக. உங்களின் மேன்மைகளுக்கு, உயர்வுகளுக்கு, ஆசீர்வாதத்திற்கு மூலகாரணமே **கர்த்தருடைய கிருபையே.** தேவனோடு ஒப்புரவாகுங்கள். உங்களுக்கு கிருபை பாராட்டி **காத்துக் கொள்வார். கிருபையின் நாள்!**

ஜெபம்

கிருபையின் தேவனே! உங்கள் கிருபை என்னை விட்டு விலக என் தப்பிதங்களே வழியாய் அமைந்தது. என்னை மன்னித்து உங்கள் கிருபையிலே என்னை வழிநடத்தி போஷித்து உங்கள் வல்ல கரங்களின் பாதுகாப்பை கட்டளையிடும் படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு;..." (சங்கீதம் 30:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன் ஜீவ மன்னாவிற்கூடாக வழிநடத்தி வருகின்ற வேளை என் உள்ளத்தில் எழும்பிய நன்றி நவில்கின்ற வசனங்கள் சிலவற்றை மாத்திரமே மேலேயுள்ள பகுதியில் எழுதியிருக்கின்றேன். இவ் ஜீவ மன்னா வெளியீடுகளை புதியவர்களுக்கு அறிமுகம் செய்து புதிய முகவரிகளை எமக்கனுப்புவதே உங்களுக்குரித்தான தேவ இராஜ்யத்தின் ஊழியப்பங்காக இருக்கிறது.

பிரியமானவர்களே! தேவனின் வசனங்களைக் குறித்து இன்று பலருக்கு எழுதுவதற்கு திறமையிருப்பினும் தேவனுடைய ஆவியானவருக்கூடாக அவரது ஆலோசனையின்படி வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட எழுதுவதே உகந்ததென்று விசுவாசிக்கின்றேன். அதன்படி எழுதப்பட்ட ஜீவ மன்னாவை வாசிப்பதற்கூடாக 2 கோடியே 20 இலட்சம் ஜனங்களுக்கு மத்தியில் நரகாக்கினிக்கு இரையாகப் போகின்ற பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்து தமது இரட்சகர் என ஏற்றுக் கொள்வது மட்டுமன்றி அவர்களின் பாவங்களுக்காக உள்ளம் நொந்து சீரான வழிகளில் பயணிப்பார்கள். ஏனென்றால் மதுபானம், குடி வஸ்துக்களுக்கு அடிமையாகி இருந்தவர்கள் அவைகளிலிருந்து விடுதலைப் பெறுதலும், சிறைச்சாலையில் கைதிகளாக இருப்பவர்கள் விடுதலைப் பெற்று மகிழ்ச்சிகரமாக வாழ்வதும் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்? சமாதானமின்றி இருந்த குடும்பங்கள் தேவ ஆவியானவரின் சமாதானத்தைப் பெற்று இணைந்து மகிழ்ச்சிகரமாக வாழ்கின்றார்கள். இப்படியாக தற்கொலை செய்துக்கொள்ள நினைத்தவர்களின் மனம் மாறுதலடைந்து விடுதலைப் பெற்று தன்னையும், மற்றவர்களையும் நேசிப்பவர்களாகவும், வாழும்வரை தேவனுடைய ஊழியங்களுக்காக அர்ப்பணித்து ஆச்சரியமானதும், அற்புதமானதுமான மாறுதலைப் பெற்றிருக்கிறார்கள். ஜீவ மன்னாவை தினமும் வாசிக்கின்ற போது உங்கள் உள்ளத்தில் தேவ ஆவியானவர் 'பேசுவது எனக்கு' என்று உணர்ந்துக் கொள்ளுதல் எவ்வளவு உன்னதமான காரியம்? பரி. லூக்கா 4:18 வேத வசனத்தின்படி **"கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார். தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையும், குருடருக்குப் பார்வையையும், பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,"** என வெளிப்படுத்தியிருக்கி.



அன்புள்ளவர்களே! எங்கள் சுகமளிக்கும் ஆராதனைகளுக்கும், துதி ஆராதனைகளுக்கும் வாரந்தோறும் பெரும்பாலானோர் கலந்துக் கொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ளார்கள். இப்படியான உன்னத சேவை கடந்த 17 வருட காலம் முழுவதும் இடையறாது தேவனின் அநுக்கிரகத்தோடு நடந்தேறுகின்றது. விசுவாசத்தோடு பெரும்பாலானோர் பிரபல ஆசீர்வாதங்களைப் பெற்று சாட்சி பகருகிறார்கள். எங்களுக்கு வரும் கடிதங்களும், சாட்சிகளும் அநேகமாயிருக்கின்றன. சிலர் எதிராகவிருப்பினும் பலரின் ஊழியங்களைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். மனிதன் சுயநலமாக எல்லா வேளையிலும் சிந்திப்பானேயன்றி முழு நாட்டிற்கும் உரைப்பதை விரும்பமாட்டான். எப்படியெனினும் தேவ அநுக்கிரகத்தோடு தேவ இராஜ்யத்தின் காரியங்களை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல தேவன் ஆசீர்வதிப்பாராக!



❀❀❀ **"ஒளிமயமான எதிர்காலம்!"** ❀❀❀

**ஆவிக்குரிய செய்தி:**
தலைமைப் போதகர் ஏ.ஜே. ஜோசப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயேசு கைவிடார் தேவ சபைக்கு வரும் வழிப்படம்.




புறக்கோட்டையிலிருந்து 138 பஸ் பாதையில் வரும் நீங்கள் களனிதிஸ்ஸ மின் நிலையத்தின் முன் அமைந்திருக்கும் கோயில், விகாரை, செனோக் காட்சியறை, சேன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இவற்றை கடந்து விஜய கிரபிக்ஸ் நிறுவனத்தின் கட்டிடத்தை நோக்கி வாருங்கள். கண்டி வீதியினூடாக வரும் உங்களுக்கும் இவ் அடையாளங்களுக்கூடாக வந்தடைய இலகுவாயிருக்கும்



(களனிதிஸ்ஸ மின் நிலையம்)

## எங்களுடைய கணனி இணையத்தள நேரடி ஒளிபரப்பில் தொடர்பு கொள்வதற்கு...

Apple லும் Android கையடக்க தொலை பேசியின் மூலமும் டெப் வழியாகவும் Play store கிளிக் செய்து jesusnf என Type செய்து JNF ஐ கிளிக் செய்யுங்கள்

Google.com » ustream.tv » jesusnf » jesusnf (click)

## நீங்கள் ஜீவ மன்னா தின மஞ்சரியை பெற்றுக் கொள்ள மகிழ்ச்சியான உள்ளத்தோடு காணிக்கைகளையும், கொடுப்பனவுகளையும் எமக்கு அனுப்பமுடியும்!

**காசக்கட்டளை**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வங்கியின் மூலம்**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி.
கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு
பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N:- QD/04/NEWS/2018

## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய. (பழைய டொயொடா நிறுவனக் கட்டிடம்).
011-2437189 011-2334865 071-4922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org

இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய ஜீவ மன்னா குட் நியூஸ் பிரிண்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org